அருளோசை

திருவள்ளுவர் ஆண்டு 2004
ஆவணி
1973 ஆகஸ்ட்டு

சமய பாட போதனைத் திங்களிதழ்



இராமானுசர்

இராமனுச நூற்றந்தாதி

—:×:—

இன்புற்ற சீலத்(து) இராமா-
னுச, என்றும் எவ்விடத்தும்,
என்புற்ற நோயுடல் தோறும்
பிறந்(து) இறந்(து) எண்ணரி
துன்புற்று வீயினும் சொல்லுவ(து)
ஒன்றுண்டுன் தொண்டர்கட்கே
அன்புற்(று) இருக்கும் படி என்னை
யாக்கியங்(கு) ஆட்படுத்தே!

— திருவரங்கத்தமுதனா

தமிழ்நாடு தெய்விகப் பேரவை
சென்னை-600018

சிவனடியார் வரலாறு

புகழ்த்துணை நாயனர்

செருவிலிபுத்தூரில் ஆதிசைவர் குலத்தில் அவதரித்த வர் புகழ்த்துணையார். அவர் மறையின் வழுவாது, விதிப் படி சிவபெருமானை வழிபாடியற்றிவந்தார். இவ்வாறு இருக்கும் நாளில் வறுமை ஏற்பட்டு பட்டினி கிடக்க நேர்ந்த போதிலும், மிகுதியும் வாட்டுகின்ற பசியையும் மறந்து, "பரம்பொருளை அருச்சிப்பதை விடுவேனல்லேன்" என்று இரவும் பகலும், குளிர்ந்தநீரால் திருமேனி விள்க்கி தேன்சொரியும் மலர்கொண்டு அருச்சித்து வந்தார்.

இவ்வாறு பெருமானுக்குத் திருமஞ்சனம் ஆட்டிக்கொண் டிருக்கும் ஒருநாளில் பசிப்பிணியால் மிக வருந்தித் தளர்ச்சி யுற்றுப் பெருமானின் திருமேனியை விளக்கும் பெருமையை யுடைய அப்புனித நீர்தாங்கிய குடத்தின் பாரம் தாங்காது பெருமான்மீது வீழ்த்தி மயக்கமுற்றூர்.

சிவபெருமான் திருவருளால் அப்படியே அயர்ந்து தூங்கி விட்டார். அதுபோழ்து இறைவன் அவர் கனவில் தோன்றி "பஞ்சம் நீங்கும்வரை நாள்தோறும் உனக்கு ஒரு காசு நாம் தருவோம்" என்று திருவாய் மலர, புகழ்த்துணையாரும் துன்பம் நீங்கி எழுந்திருந்தார்.

பீடத்தின்கீழ் ஒருகாசு இருக்கக்கண்டு அதையெடுத்து பசிநீங்கக் காசு கிடைத்ததனல் அடைந்த மகிழ்ச்சியைவிட பரம்பொருளின் திருவருள் கிடைத்ததனல் "முற்றுணர்வு தலைநிரம்ப முகமலர்ந்து களிகூர்ந்தார்."

இவ்வாறு பஞ்சம் நீங்கும்வரை சிவபெருமான் அளித்த காசுகொண்டு வாழ்ந்து பஞ்சம் நீங்கிய பின்னரும் இறை வனுக்கு மெய்யடிமைத் தொழில் செய்து "பொன்னுட்டின் அமரர் தொழப் புனிதரடி நிழல் சேர்ந்தார்."

—மருதமலையான்.

பிரமாதீச ஆண்டு ஆவணித் திங்கள் 11-ஆம் நாள் (27-8-73) திங்கட்கிழமை யன்று, புகழ்த்துணை நாயனரின் திருநட்சத்திரமாகிய ஆயிலியம் வருகிறது.

அருளோசை

திங்களிதழ்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானகுரு வாணியை உள்நாடு.

மணி 2	பிரமாதீச ஆவணி 1973 ஆகஸ்ட்டு	ஓசை 2

அருளோசை அன்பர்களுக்கு வணக்கம்

"அருளோசை" சந்தாவை உயர்த்தியதைப் பற்றிப் பல அன்பர்கள் பலவிதமான கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர். "அருளோசை" பொருளீட்டும் நோக்கோடு நடத்தப் பெறவில்லை. இருந்தாலும் இழப்பை ஈடுகட்ட வேண்டியது அவசியமாகிறது. எனவே அன்பர்கள் தொடர்ந்து தங்கள் நல்லாதரவைத் தரவேண்டுகிறோம்.

இதுவரை ஆண்டுச் சந்தா ரூ 3/- செலுத்தியவர்கள் மேற்கொண்டு தொகையனுப்ப வேண்டியதில்லை. அவர்களுக்கு ஓராண்டிற்கு இதழ்கள் அனுப்பப் பெறும். இனிமேல் சந்தா செலுத்துபவர்களும், புதுப்பித்துக் கொள்பவர்களும் ரூ 5- செலுத்தவேண்டும்.

இந்த இதழில் "இராமாநுசர் வரலாறு" தொடர் கட்டுரையாக வெளிவருகிறது. மேலும் சந்தான குரவர் வரலாறும், பின் நாட்களில் எடுத்துப் "பைண்டு" செய்து கொள்வதற்கேற்ப நான்கு நான்கு பக்கங்களாக வெளிவரும். அன்பர்கள் இவற்றைக் கிழித்தெடுக்காமல் பிரித்தெடுத்துப் புத்தகமாக்கிக் கொள்ள வேண்டுகிறோம்.

தவிர சென்ற பக்க எண்களின் தொடர்ச்சியாக இவ்விதழில் பக்க எண்கள் குறிக்கப் பெற்றுள்ளன. இது புத்தகத்தை அப்படியே எடுத்துப் பைண்டு செய்து கொள்பவர்களுக்குத் துணையாக இருக்கும். ஓராண்டிற்குத் தொடர்ச்சியாக இவ்வாறு பக்க எண்கள் கொடுக்கப் பெறும்.

"வினாவிடைப் பகுதியில்" என்ன காரணத்தாலோ அன்பர்களுக்கு ஆர்வம் குன்றியிருப்பதை உணர்கிறோம். எனவே இதனைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்து, "ஐயந்தெளிதல்" என்ற பகுதியை அடுத்த இதழிலிருந்து தொடங்கக் கருதியிருக்கிறோம். எனவே வாசக அன்பர்கள் சமய சம்பந்தமாகத் தங்களுக்கு ஏற்படும் ஐயங்களை

எழுதியனுப்பினல் அவற்றைத் தக்க அறிஞர்களைக் கொண்டு தெளிவாக்க முயற்சிசெய்கிறோம். தேர்ந்தெடுக்கப் பெறும் வினக்களுக்கே விடையளிக்கப்பெறும். தங்கள் நல்லாதரவைத் தொடர்ந்து தந்து "அருளோசையின்" வளர்ச்சிக்குத் தக்காங்கு துணை நிற்க வேண்டுகிறோம்.

அ. நாராயணசுவாமி, பி.ஏ.,
பதிப்பாசிரியர்.

இந்த இதழில்

மேல் அட்டைப்படம் புதுவை பிரஞ்சு இந்திய கழகத்தின் (French Institute of Indology) உரிமை பெற்றது.

ஒரு திருத்தம்

ஜூலை மாத இதழில் 4-ஆம் பக்கத்தில் 25-ஆம் வரியில் "அனேகானந்த வாதம்" என்றிருப்பதை "அநேகாந்தவாதம்" என்று திருத்தி வாசித்துக் கொள்ளவும்.

—பதிப்பாசிரியர்

"அருளோசை"

வின விடைப் பகுதி—ஜூலை-73

பரிசு பெற்றவர்கள்

முதல் பரிசு: திரு. தி. கு. நவனீதம், திருச்சிராப்பள்ளி-2. சந்தா எண் 93.

இரண்டாம் பரிசு: திருமதி. சரோஜா சொக்கலிங்கம், பாளையங் கோட்டை, திருநெல்வேலி மாவட்டம், சந்தா எண் 2010.

மூன்ரும் பரிசு: திரு. மீ. சீனிவாசன், திருவாடானை, இராமநாதபுரம் மாவட்டம், சந்தா எண் 1837.

நான்காம் பரிசு: திரு. க. இராமச்சந்திரன், திண்டுக்கல், மதுரை மாவட்டம், சந்தா எண் 2086.



நல்வாழ்த்துக்கள் !

இந்திய தத்துவ ஞானங்களில் சமணத்திற்கு அடுத்து சிந்தனைக் குரியது பௌத்த நெறியாகும். செல்வ, பௌத்த சமயத்தைப் பற்றி நீ பொதுவாக அறிந்திருப்பாய். பௌத்த சமயம், சமய உலகில் மட்டு மின்றி அரசியல் உலகத்திலும் விளக்கமுற்ற ஒன்று. புத்தர் வரலாற்றை அறியாதார் அறியாதாரே! செல்வ, பௌத்த சமயம் இன்று தென் கிழக்காசிய நாடுகளில் செல்வாக்குப் பெற்ற ஒரு சமயமாக விளங்கு கிறது. அசோக சக்கரவர்த்தியினுடைய அருந்தொண்டால் பௌத்த சமயம் கிழக்காசிய நாடுகள் முழுதும் பரவிக் கால் கொண்டது.

பௌத்த சமயம் இவ்வளவு பரவியிருந்தாலும், பௌத்த சமயக் கொள்கைகளை எளிதில் அறிந்து கொள்ள முடியாதவாறு போனதற்கு நூல்கள் பலவாகவும், ஒன்றேடொன்று ஒரோவழி முரண்படுவனவாக வும் அமைந்திருப்பதே காரணம். செல்வ, புத்தர் தாம் கண்ட ஞானத் தினை அல்லது முடிவுகளை எழுதவில்லை. ஏன்? அவருடன் வாழ்ந்தவர் களாலும் எழுதப் பெறவில்லை. புத்தர் காலத்திற்குப்பின் ஆண்டுகள் பல கழிந்தே அவை எழுத்துருவம் பெற்றன. ஒரு தத்துவத்தைப் பற்றி அத்தத்துவத் தலைவர் வாழ்ந்து முடித்தபின் நீண்ட இடைவெளிக்குப் பின் வேறு சிலரால் நூல் செய்யப்படும் பொழுது செய்வோரின் கருத்துச் சேராதிருப்பதற்கு வழியேது? பௌத்த நூல்கள் பாலிமொழியில் தோன்றின. பாலிமொழி வடமொழியின் திரிபுமொழி. அதுமட்டு மன்று. பௌத்த நூல்கள் எண்ணிக்கையில் பல. ஒவ்வொன்றும் வெவ்வேறு காலத்தில் தோன்றியன. பௌத்த சமயத்தை எளிதில் விளங்கிக் கொள்ள முடியாதவாறு தடைசெய்வது அதனுடைய பல்வேறு பிரிவுகள்—உட்பிரிவுகள். மேலும், இவ்வளவு தொன்மையான சமயத் திற்குக் காலத்தின் விளைவால் தோன்றும் பிழைகளைத் திருத்த எத்தகைய மரபும் இல்லாது போனது ஒரு பெரிய குறை.

திருவளர் செல்வ, உனக்கொரு வியப்பான செய்தி! வரலாற்றின்படி கௌதம புத்தரே பௌத்த சமயத்தைக் கண்டவர். ஆனால், பௌத்த சமயத்தின் நூல்களின்படி கௌதம புத்தர்—நாமும் நீயும் படிக்கும் கௌதம புத்தர்—பௌத்த சமயத்தை நிறுவியவர் அல்ல. இந்தக் கௌதம புத்தருக்கு முன்பு புகழ்பெற்ற புத்தர்கள் இருபத்து நான்கு பேர் இருந்தனர் என்று தெரிகிறது. நமது மணிமேகலை, "இறந்த காலத்து எண்ணில் புத்தர்" என்று பேசுகிறது.

செல்வ, பௌத்த சமயம் இந்து சமயத்திலிருந்து வேறுபட்டதல்ல. இந்து சமயத்தின் விரிவாக்கமே என்று வாதிடுவோரும் உண்டு. ஆனால், பௌத்த சமயத்தின் விரிவான கொள்கைகளை ஆராய்ந்தால் அது எந்த அளவுக்கு இந்து சமயத்தோடு ஒத்துவரும் என்பது ஐயத்திற்குரியதே. ஆனால், இங்ஙனம் கூறுவதன் மூலம் சமய ஒருமைப்பாட்டை நாம் மறுப்பதாகப் பொருள் கொள்ளற்க. ஆன்மாவின் ஈடேற்றம் என்ற அடிப்படை இலட்சியம் உலகின் அனைத்துச் சமயங்களுக்கும் ஒன்றே. ஆயினும், அதை அடையும் வழிவகைகளில் விண்ணில் விளங்கும் விண்மீன்களிலும் மாறுபாடுகள் அதிகம். ஏன்? உலகின் உள்பொருள்கள் எவை எவை என்பதிலேயே சமய நெறிகள் மாறுபடுகின்றன. ஆனாலும், செல்வ! ஒத்த கொள்கைகளின் அடிப்படையில்தான் ஒருமைப்பாடு என்றால் அது ஒருபோதும் உலகத்தில் தோன்றாது வேறுபாடுகளுக்கிடையிலும் ஒருமைப் பாட்டைக் காண்பது தான் பண்பாடு.

இந்து சமயத்திற்கும், பௌத்த சமயத்திற்கும் இடையே சில ஒற்றுமைகள் இருக்கலாம். ஆனால், வேற்றுமைகள் இல்லையென்று கூறமுடியாது. வேற்றுமையில்லை யென்றால் ஏன் ஒரு புதிய சமயம் தோன்றுகிறது? பௌத்த சமயத்திற்கும் இந்திய தத்துவங்களுள் சைவசித்தாந்தத்திற்கும் நிறைய முரண்பாடுகள் உண்டு. சைவசித்தாந்தம் பௌத்த சமயத்தைப் புறப்புறச் சமயம் என்றே கூறுகிறது. அதனாலே தான் பௌத்த சமயத்தை எதிர்த்து நமது சமயத் தலைவர்கள் போர்க் கொடி தூக்கினர்.

இந்து சமயம், பௌத்த சமயத்தோடு அடிப்படையிலேயே மாறுபடுகிறது. ஒரு தத்துவத்தை அல்லது ஒரு பொருளை ஆராய்ந்து அறிதற்கு இந்து சமயம் காண்டல்-கருதுதல்-சான்றோர் சொல்வழக்கு ஆகிய மூன்றையுமே அளவு கோலாகக் கொள்ளும். ஆனால், பௌத்தம் காண்டல், கருதுதல் ஆகிய இரண்டை மட்டுமே ஏற்கும். பௌத்தம் ஒதுக்கிய சான்றோர் சொல்வழக்கே இந்து சமயத்திற்கு முதன்மையானது. இந்து சமயத்தில் அளவையாகிய சான்றோர் சொல் வழக்கென்பது வேதங்களையே குறிக்கும். வேதங்களை ஏற்றுக் கொள்ளாத சமயங்களை ஒரு சமயம் என்றே இந்து சமய நம்பிக்கையுடையோர் ஏற்றுக் கொள்வதில்லை. மேலும் எழுதுவோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு.

குன்றக்குடி அடிகளார்



மெய்ப்பொருள் காண்பது அறிவு

அறிவாராய்ச்சியியலும் அடிப்படைத் தத்துவ இயலும்

[வித்துவான் திரு. வை இரத்தினசபாபதி, எம்.ஏ., பி.ஓ.எல்.,]

முன்னுரை :

அறிவாராய்ச்சியியலோடு இணைந்த துறைகள் மூன்று என்பதும் அவைகள் முறையே உள்ளத்தியல் அளவையியல் அடிப்படைத் தத்துவ இயல் என்பதும் முன்னரே குறிப்பிடப் பெற்றுள்ளன. அவற்றுள் அறிவாராய்ச்சியியலுக்கு உள்ளத்தியலோடும் அளவையியலோடும் அமைந்த ஒற்றுமை வேற்றுமைகளும் விளக்கப் பெற்றுள்ளன. அறிவாராய்ச்சியியலும் அடிப்படைத் தத்துவ இயலும் கொள்ளும் இணைப்பையும் வேறுபாடுகளையும் விளக்குவதே இக்கட்டுரை.

அடிப்படைத் தத்துவ இயல் என்றால் என்ன ?

அடிபடைத் தத்துவம் என்பதை மூலப்பொருள் பற்றிய வாதம் என்பதன் மூலம் தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம். உலகில் பல்வேறு வகையான பொருள்களும் தோன்றி வளர்ந்து அழிகின்றன என்பதைக் கண்ட முன்னோர்கள் அவைகளில் தோற்றம் பற்றிய இருவகை வினாக்களை எழுப்பினர். இந்த உலகம், நாம் காணும் இதே முறையில், ஒரே சமயத்தில், திடீரென, மாயாஜாலம் போல அமைக்கப் பெற்றதா? அவ்வாறன்றி, முதலில் ஏதேனும் மூலப் பொருள்களை உண்டாக்கி, அவற்றின் மூலம் படிப்படியாக வளர்ச்சி பெற்று, இப்போதுள்ள முறையில் வளர்ந்து வந்ததா? இவை ஒருவகை வினாக்கள். இவை உலகின் தோற்றம், உலகின் அடிப்படைப் பொருள் ஆகிய செய்திகளை அடிப்படையாகக் கொண்டவை. இரண்டாம் வகை வினாக்கள் உலகம் யாராலாவது உண்டாக்கப் பெற்றதா? உலகம் தானாகத்தோன்றியதா? என்பன போன்றவை. இங்கே பாரசீகக் கவிஞன் ஒருவன் கூறிய கூற்றை நினைவிற் கொள்ளலாம்.

“உலகம் என்பது முதற்பக்கமும் கடைசிப்பக்கமும் இல்லாத ஒரு புத்தகம்; அதைப் படிக்க முயன்றவர்கள் முதற்பக்கம் எதுவாக இருக்கலாம், கடைசிப் பக்கம் எதுவாக இருக்கலாம் எனக் கண்டறிய முற்பட்டபோது எழுந்த கருத்துரைகளே தத்துவங்கள்” என்பது அவன் கூற்று.

புத்தகத்தின் முதற்பக்கம் அதனை எழுதியவனைப் பற்றிக் கூறும். இப்புத்தகம் உருவான வரலாறு இது என்பதையும் அம்முதற் பக்கம் மூலமாக அறியலாம். முதற்பக்கம் இல்லாமையால் அவைகளைப் புரிந்து கொள்ள இயலவில்லை. கடைசிப்பக்கம் இருந்திருந்தாலாவது அதன் மூலமாக முதற்பக்கம் இப்படித்தான் இருந்திருக்கும் என்பதைப் புரிந்து கொள்ளலாம். இந்நிலையில் நமக்குக் கிடைத்த அரும்பெருங் கருவூலமே இவ்வுலகம். புத்தகத்தைப் படிக்கப் படிக்க அதில் உண்டாகும் சுவையின் இழுப்புக் காரணமாக, இவ்வுலகத்துக்கு மூலம் எது? அதன் ஆசிரியன் யார்? எனத் தெரிந்து கொள்ளத் துடிப்பது போல

இவ்வுலகின் மூலம் எது? இவ்வுலகை உண்டாக்கியவன் யார்? உண்டாக்கிய முறை எவ்வாறு? என்ற வினாக்களுக்கெல்லாம் விடைகாணத் துடித்தவர்களே தத்துவ ஞானிகள்.

கி.மு நூற்றாண்டுகளிலேயே இத்தகைய வளர்ந்த சிந்தனைகள் ஆய்வுக்குரியனவாக இருந்தன. பொருள்கள் பலவாக இருப்பினும் உயிர்ப்பொருள் வேறு. உயிரில்லாத பொருள் வேறு எனப் பிரித்துக் கண்ட முறையைத் தொல்காப்பியத்திற் காணலாம். உயிர்ப்பொருள்கள் ஒன்றிலிருந்து ஒன்று தோன்றி வளர்ந்தன என்ற கருத்துக்குத் தொல்காப்பியத்தில் இடம் இல்லை. உயிர்ப் பொருள்கள் ஆறுவகைகளாகப் பிரிக்கப் பெற்றிருந்தன; அவ்வளவே.

உயிர் இல்லாத பொருள்கள் பலவாக இருந்தாலும் அவைகள் தண்ணீர் என்ற ஒரு மூலப் பொருளிலிருந்து தான் தோன்றி வளர்ந்தன என்றும், இல்லை, இல்லை, நெருப்பு என்ற மூலப் பொருளிலிருந்துதான் தோன்றி வளர்ந்தன என்றும் சொல்லப்பெறும் கருத்துக்கள் கிரேக்க நாட்டுத் தத்துவச் சிந்தனைகள் கிரேக்க நாட்டுத் தத்துவ உலகில் விடிவெள்ளி தோன்றிய காலத்தில், இந்திய நாட்டில், ஏன், தமிழகத்தில். தத்துவ உலகம் நண்பகலாக இருந்தது. உலகப் பொருள்கள் பலவாக இருந்தாலும் அவை ஐந்து வகையான மூலப்பொருள்களிலிருந்து உண்டாயின என வரையறை செய்யப்பெற்ற கருத்தானது தொல்காப்பியக் காலத்திலேயே நிலவியிருந்ததைக் காணலாம்.

உலகத் தோற்றத்துக்குரிய மூலப்பொருள்கள் ஐந்து என்று குறிப்பிட்டாலும் அவற்றின் அடிப்படையில் இந்த உலகம் உருவாகும்போது இரண்டு வகையான முறைகளைக் கையாளுகிறது என்று கண்டிருந்தார்கள்.

கலப்பு முறையிலும், மயக்க முறையிலும் இவ்வுலகம் உருவாயிற்று என அவ்விரண்டு முறைகளுக்கும் பெயரிட்டுக் காட்டினார்கள். பொருள்களின் உருவம் மாறுபடாமல் இருக்க, அப்பொருள்களின் உருவம் தெளிவாகப் புலப்பட, இரண்டு பொருள்கள் இணையும் இணைப்புக்குக் கலப்பு முறை என்று பெயர். அரிசியும் உளுந்தும் ஒரு பாத்திரத்தில் இணைந்து கிடக்குமானால் அது கலப்பு முறை. இனி, உருத்தெரியா வண்ணம் மாற்றம் பெற்றுப் பொருள்கள் இணையும் இணைப்பு முறைக்கு மயக்க முறை என்று பெயர். இட்டளி மாவு இம்முறைக்கு உரிய எடுத்துக் காட்டாகக் கொள்ளலாம். அரிசியும் உளுந்தும் உருவம் தெரியாமல் உருவமாறி இணைந்துள்ள இணைப்பே மயக்கமுறைக் கலப்பு.

மேலே குறிப்பிடப் பெற்ற இரண்டு முறைகளில் ஐந்துவகை மூலப் பொருள்களும் இணைவதால் உண்டானதே உலகம் என்ற கருத்தைத் தொல்காப்பியம் தெரிவிக்கிறது.

> "நிலம் நீர் தீ வளி விசும்போடு ஐந்தும்
> கலந்த மயக்கம் உலகம் ஆதலின்"

என்பது தொல்காப்பியம். மண், தண்ணீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்ற ஐந்து மூலப் பொருள்களும் கலந்த உலகம் எனவும் மயங்கிய மயக்கம் உலகம் எனவும் இரண்டாகப் பிரித்துக் காணுதல் வேண்டும்.

உலகிற்கு மூலப் பொருள்கள் ஐந்து என்ற கொள்கையும் பின்னிட்டுப் போக, முற்பட வளர்ந்த சிந்தனையும் ஒன்று உண்டு. இந்த ஐந்துங்கூட ஒரே மூலப் பொருளிலிருந்து உண்டாகிய கூட்டுப் பொருள்களே. சாங்கியம் என்ற தத்துவக் கொள்கை உலகின் மூலப் பொருள் இரண்டே எனக் கூறுகிறது. 'புருஷன்', 'பிரகிருதி' என்ற

இரண்டு அடிப்படை மூலப் பொருள்கள் உண்டு என்பது சாங்கியக் கொள்கை 'புருஷன்' என்ற மூலப் பொருளிலிருந்து உண்டாகிய கூட்டுப் பொருள் எதுவும் இல்லை. ஆனால் 'புருஷன்' முன்னிலையில் 'பிரகிருதி' என்ற மூலப்பொருள் பலவகையான மாற்றங்களைப் பெற்று இவ்வுலகமாகிறது என்பது சாங்கியக் கொள்கை. இவ்வாறே பிரெஞ்சு நாட்டுத் தத்துவ ஞானியாகிய 'டேக்கார்ட்' என்பவரும் உள்ளம், உடல் [Mind, Body.]. என்ற இருவேறுவகைப் பொருள்களே மூலப் பொருள்கள் என்றார்.

இதுவரையில் இதைப்பற்றி வந்த கொள்கைகளை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். அவை ஒருமைக் கொள்கை, இருமைக் கொள்கை பன்மைக் கொள்கை [Monism, Dualism, Pluralism] என்பன. உலகின் மூலப்பொருள்கள் ஒன்றே என்பது ஒருமைக் கொள்கை; சங்கரரின் அத்துவிதம் போல, சாங்கியம் போன்றவை உலகின் மூலப்பொருள்கள் இரண்டு எனக் கொள்வதால் இருமைக் கொள்கையை மேற்கொள்பவை. சைவசித்தாந்தம் மூன்று பொருள்களைக் கொள்வதால் பன்மைக் கொள்கையைச் சார்ந்ததாகிறது.

இவ்வாறு அடிப்படைப் பொருள் அல்லது மூலப்பொருள் பற்றிய ஆய்வை முறையாக நடத்துவதே அடிப்படைத் தத்துவ இயல்.

அடிப்படைத் தத்துவ இயலின் வேறுபெயர்கள் :

அடிப்படைத் தத்துவ இயலைப் புலன் கடந்த பொருளியல் எனக் கூறுவதும் உண்டு.

நம்முடைய புலன்களுக்கு உரிய அனுபவப் பொருள்களாக இருப்பவையே இவ்வுலகப் பொருள்கள். இவ்வுலகப் பொருள்களுக் கெல்லாம் மூலப்பொருளாக, அடிப்படைப் பொருளாக இருப்பது எது? என்ற ஆய்வை மேற்கொள்ளும்போது, அவ்வடிப்படைப் பொருளானது நம்முடைய புலன்களின் நேரான அனுபவத்துக்கு உரிய பொருளாக அமைவது அன்று. நம்முடைய புலன்களின் அனுபவத்துக்கு அப்பாற் பட்ட, எட்டாத, கடந்த பொருளைப் பற்றிய சிந்தனை ஆதலின் 'புலன் கடந்த பொருளியல்' என்று வழங்கினர்கள்.

அடிப்படைத் தத்துவ இயல், புலன் கடந்த பொருளியல் என்ற இரு வகை மொழிபெயர்ப்புக்கும் மூலமாக இருந்த கிரேக்கச் சொல் ஒன்றே. அது Metaphysics. Physics என்ற சொல் இன்று விஞ்ஞான உலகில் நன்கு பயிலப்பெறும் சொல். பௌதிக இயல் என்பது அதன் தமிழாக்கம். பருப்பொருளைப் பற்றிய ஒரு முறையான அறிவை-பௌதிக அறிவைத் தருவது Physics. மனிதன் தன்னுடைய புலன்களால் அறியக்கூடிய பருப்பொருளைப் பற்றிய ஆய்வைத் தருவது Physics.

Physics என்ற சொல்லோடு Meta என்ற முன்னிணைப்புச் சொல்லைச் (Prefix) சேர்த்து உண்டாக்கப் பெற்ற சொல்லே Metaphysics. Meta என்ற சொல் After என்ற பொருளைத் தரும். எனவே Metaphysics என்ற சொல்லானது 'நாம் காணும் பொருள்களுக்கு அப்பால்' என்ற பொருளைத் தருவதன் மூலம், நம்முடைய புலன்களின் வழி அறியப் பெறும் பல்வகைப் பருப்பொருள்களுக்கு அப்பால், நம்முடைய புலன் களைக் கடந்த நிலையில் உள்ள பொருளாக, ஆனால் அதே சமயத்தில் நாம் காணும் பருப்பொருள்களுக்கெல்லாம் மூலப்பொருளாக-அடிப்படைப் பொருளாக இருப்பதைப் பற்றி ஆய்வது என்ற பொருளைத் தருகிறது. இந்நிலையில் Metaphysics என்ற சொல்லானது அடிப்படைத் தத்துவ இயல், புலன்கடந்த பொருளியல் என்று மொழிபெயர்க்கப் பெற்று மூலப்பொருள் பற்றிய ஆய்வைத் தருவதாயிற்று.

நாம் யார்? நம்மைச் சூழ்ந்துள்ள உலக அமைப்பு யாது? உள்பொருள் ஒன்ரு? பலவா? என்பன போன்ற அடிப்படையான கேள்விகளை எழுப்புவதால் அடிப்படைத் தத்துவ இயல் என்று இதனை வழங்கும் வழக்கமே மிகுதியும் காணப்பெறுவதொன்ரும்.

அறிவாராய்ச்சியியலும் அடிப்படைத் தத்துவ இயலும்:

'அறிவு' என்ற ஒன்று செயற்படத் தொடங்க வேண்டுமானுல் அது மூன்று கூறுகளை அடிப்படையாக வைத்தே நிகழ்ச்சிக் குட்படும். அறிபவன், அறியப் பெறுகின்ற பொருள், அறிவு என்ற மூன்றும் இணைந்தே நிற்கும். அறிவானது சார்பு பற்றித் தொழிற்படுமேயன்றி வெற்றிடத்தில் தொழிற்படாது. எல்லா அறிவு நிலைகளிலும் இம்மூன்றும் இணைந்தே நிற்பதைக் காணலாம். அதனுல் அறிவைத் 'திரிபுடிசம்வித்' என வழங்குவர். அறிவை அறியப் பெறும் பொருளிலிருந்து தனியாகப் பிரித்தோ அல்லது அறிபவன் நிலையிலிருந்து தனியாகப் பிரித்தோ அறிவது என்பது இயலாததொன்று.

அறிவாராய்ச்சியியலையும், அடிப்படைத் தத்துவ இயலையும் ஒன்று என்றே கூடக் கூறிவிடலாம். எவ்வாறு? அடிப்படைத் தத்துவ இயலின் நோக்கமே மூலப்பொருள் எது? எத்தனை? என்ற ஆய்வை நடத்துவதுதானே! நாம் காணும் புறவுலகை எடுத்துக்கொண்டு, அப்புறவுலகின் அடிப்படைப் பொருள் ஒன்ரு? இரண்டா? என்ற ஆய்வை நடத்தும்போது, அது புறவுலகை ஆயும் அடிப்படைத் தத்துவ இயலாக அமைகிறது. அவ்வாறின்றி, அனைத்தையும் அறிகின்ற நான் யார்? நான் தனிப்பொருளா? கூட்டுப் பொருளா? நான் இயற்கைப் பொருளா? மாற்றத்துக்குரிய பொருளா? என்ற வினுக்களை எழுப்புவோமானுல் அவைகள் அறிபவனைப் பற்றிய அடிப்படைத் தத்துவ இயலாக அமைந்து விடக் காணலாம். அவ்வாறே அறிவைப் பற்றியும் சில முறையான அடிப்படை வினுக்களை எழுப்புவோமானுல் அது, அறிவைப் பற்றிய அடிப்படைத் தத்துவ இயலாக மலர்கிறது.

அறிவின் தோற்றம் எது? அறிவின் அடிப்படை எது? அறிவின் எல்லை எது? அறிவின் அடிப்படை இயல்பு எது? என்று அறிவைப் பற்றிய அடிப்படையான பிரச்சினைகளை ஆராய்வதால் அறிவாராய்ச்சியியலைக் கூட அடிப்படைத் தத்துவ இயல் என்றே கருதி விடுபவர்களும் உளர். புறவுலகு பற்றிய அடிப்படைத் தத்துவங்களை ஆய்வு செய்து முடிவுகாண்பது அடிப்படைத் தத்துவ இயல். இது உலகம், உள்பொருள் ஒன்ரு இரண்டா? என்பன போன்றவைகளையே ஆராய வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. ஆனுல் அறிவாராய்ச்சியியலோ, அறிவைப் பற்றிய ஆய்வை மட்டுமே வற்புறுத்துகிறது. அறிவு என்ருல் என்ன? அறிவின் அடிப்படை எது? அறிவு இயற்கையா? செயற்கையா? இரண்டுமா? என்று இப்படிப்பட்ட வினுக்களை எழுப்பி, அறிவின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தனியே ஆய்வதுதான் அறிவாராய்ச்சியியலின் நோக்கம். அறியப்பெறும் பொருள் பற்றிய ஆராய்ச்சியை நீக்கி, அறிவைப் பற்றியே ஆராய்கின்ற காரணத்தால் அறிவாராய்ச்சியியல் அடிப்படைத் தத்துவ இயலிலிருந்து வேறுபட்டு விடுகின்றது.

முடிப்புரை:

மேலே குறிப்பிடப் பெற்றவாற்ருல் அறிவாராய்ச்சியியலோடு தொடர்புடைய அடிப்படைத் தத்துவ இயல் என்ருல் என்ன என்பதும், அடிப்படைத் தத்துவ இயலின் வேறு பெயர்களும் அவற்றின் விளக்கங்களும் இவை இவை என்பதும், அறிவாராய்ச்சியியலும் அடிப்படைத் தத்துவ இயலும் எவ்வாறு இணைந்தும் வேறுபட்டும் தத்தம் ஆய்வை நடத்துகின்றன என்பதும் விளக்கமாக அறியலாம்.

உ

சிவமயம்

வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க

சீலத்திரு ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்

வேகம் என்ற சொல் பல பொருள் தரும். அப்பொருளைக் காண வேகம் வேண்டா, வாயுவேகம் மனோவேகம் எல்லாம் எல்லாரும் அறிந்தனவே. இதன் தலைப்பில் உள்ள வேகம் சிலர்க்குத்தான் தெரியும்.

வேகப் பாபம் என்ற பொருளதுமாம். அதையே நாம் கெடுத்தல் வேண்டும். நம்மால் அதைக் கெடுத்தல் இயலாது. அது கெடத் தக்க வழியும் நமக்குத் தெரியாது. அவ்வழியையும் கடவுள் குருவாய் வந்தருள்வது சமயாசாரம் உள்ளவர்கள் அறிவுக்கு மட்டும் தெரியும். அது தெரிதற் பொருட்டே 'வேகமதநல்யானை வெருவவுரி போர்த்துப் பாகம் உமையோடு ஆக' எழுந்தருளினன் இறைவன்.

'வேதியா வேத கீதா விண்ணவ ரண்ணா என்றென்
றோதியே மலர்கள் தூவி ஒருங்கிநின் கழல்காணப்
பாதியோர் பெண்ணை வைத்தாய் படர்சடைமதியஞ் சூடும்
ஆதியே ஆலவாயில் அப்பனே அருள்செய்யாயே'

என்று நம் அப்பரடிகள் அருள் செய்தவாற்றால் அவ்வுண்மை விளங்கும். பாதிமாதுடன் ஆய காரணம் அவன் கழலடிக் காட்சி, கட்டுற்றுழலும் உயிர்க்குக் கிடைத்தற் பொருட்டு எனல் இத்திருநேரிசையால் நன்கு தெரியும். இன்ன பலபல திருமுறைத் திருப்பாடல்கள் உள. அவற்றுள் வேறொன்றும் காட்டி இதனைக் கற்போர் கருத்து உறுதிப்படக் காண்போம்.

மாயம் எல்லாம் முற்றவிட்டு, இருள்நீங்க, மலைமகட்கே
நேயம் நிலாவ இருந்தான்; அவன்றன் திருவடிக்கே
தேயம் எல்லாம் நின்று இறைஞ்சும் திருப்பாதிரிப்புலியூர்
மேய நல்லான் மலர்ப்பாதம் என்சிந்தையுள் நின்றனவே.

இத்திருவிருத்தத்துள்ளும், மாயமெல்லாம் முற்றும் விட்டு அகலவும் ஆணவமாய மூலமலவிருள் நீங்கவும் ஏதுவாக நம் பரசிவம் மலைமகட்கு நேயம் நிலாவ இருந்த உண்மை புலப்படுதல் உணர்க. அவன் அருளாலே அவன்றாள் வணங்குதல் அன்றி வேறு எவ்வழியானும் அவனை வழிபடல் அரிது.

இறைவன் திருநந்தி தேவர்க்கும், அவர் சனற்குமாரர்க்கும், அவர் சத்திய ஞானதரிசனிகட்கும், அவர் பரஞ்சோதி மாமுனிகட்கும், அவர் மெய்கண்டதேவர்க்கும், அவர் அருணந்திதேவர்க்கும், அவர் மறை ஞான சம்பந்த தேவர்க்கும் அருளிய உண்மையை எடுத்துக் காட்டாகக் கருதி அதனது மறையைத் தெளிதல் வேண்டும். மலைமகட்கே நேயம் நிலாவ இருந்த-இருக்கின்ற-இருக்கும் நெறி இதுவுமாம்.

"இறைவன் அருணந்திதனக்கு இயம்ப நந்தி
கோதில் அருட் சனற்குமாரர்க்குக் கூறக்
குவலயத்தின் அவ்வழிஎம் குருநாதன் கொண்டு
தீதுஅகல எமக்கு அளித்த ஞானநூலைத்
தேர்ந்துரைப்பன் சிவஞான சித்தி என்றே"
'ஈசன்புண்டரிகத்தாள் சேரும் பரிசு'
'தேவர்பிரான்............ இவர் இச்சந்தானத்து
எமை ஆளும் தன்மையோரே'

'ஞானச்சார்புதர வந்தருளி எம்மை ஆண்ட சைவசிகாமணி' என்ற சித்திவசனம், பிரகாசவசனம் எல்லாம் 'வேகம் கெடுத்தாண்டவேந்து' செய்உபகாரத்தை விளக்குவன. சிவனை ஆண்டவன் எனல் மரபன்று. குருவையே ஆண்டவன் என்பது மரபு. சிவன் குருவாய் வருவான். ஆள்வான். ஆள்வான் எனல் எதிர்காலத்தது. எக்காலத்திற்கும் உரியதை அம்முக்காலத்திற்கும் உரிய சொல்லாற் சொல்லல் வேண்டும் என்பது தொல்காப்பிய விதி. நன்னூலாரும், "முக்காலத்தினும் ஒத்தியல் பொருளைச் செப்புவர் நிகழுங் காலத்தானே" என்றார். எனினும் உரையாசிரியர் செய்யும் என்னும் நிகழுங்காலத்துச் சொல் ஆகிய வாய்பாட்டை மறந்தனர்.

ஆளும் என்பது சிவனுக்குரியது. ஆண்டான், ஆண்டனன்' ஆண்டவன் முதலியன குருவுக்குரியன.

'சிந்தையினுள்ளும் என் சென்னியினும் சேர
வந்தவர் வாழ்க என்றுந் தீபற
மடவாளுடனே என்றுந்தீபற' என்றதில்

வந்தவர் என இறந்தகாலச் சொல்லாற் கூறியதையும் அதனுரையிலே.

'சிந்தையிலும் என்றன் சிரத்தினிலும் சேரும்வகை
வந்தவனை மண்ணிடைநாம் வாராமல்-தந்தவனை
மாதினுடன் எத்திறமும் வாழ்ந்திருக்க என்பதலால்
ஏதுசொலி வாழ்த்துவேன் இன்று'

என்று அக் காலச் சொல்லாக வந்தவன் தந்தவன் என்றதையும் 'உய்ய வந்தார்' என்றதையும் உய்ய வருவார் என்னுததையும்,

அகளமய மாய்நின்ற அம்பலத்தெங் கூத்தன்
சகளமயம் போல் உலகில் தங்கி—நிகளமாம்
ஆணவ மூல மலம் அகல ஆண்டனன் காண்
மாணவக என்னுடனும் வந்து.

ஆகமங்கள் எங்கே அறுசமயந் தான் எங்கே
யோகங்கள் எங்கே உணர்வெங்கே— பாகத்
தருள்வடிவும் தானுமாய் ஆண்டிலனேல் அந்தப்
பெருவடிவை யாரறிவார் பேசு.

என்றவற்றில் ஆண்டவனுக் கூறியதையும் அறிக. அந்தப் பெருவடிவு எனச் சிவத்தையும், பாகத்து அருள்வடிவும் தானும் ஆகி ஆண்டவன் எனக் குருவையும், அக்குருநாதர் நம் வேகங் கெடுத்தாண்ட வகையில்

ஆகமங்களையும் அறுசமயங்களையும் யோகங்களையும் ஞானங்களையும் அருளிய உண்மையையும், அவற்றாலும் அவற்றை உபதேசித்ததாலும், உபதேசித்த குருவினருளாலும் (அபரஞான பரஞானோபதேசங்களால்) அறியத்தகும் பெருவடிவாகிய பரசிவத்தையுணர்தல் இயலுமாற்றையும், இயன்று சிவமாதலையும் தெளிவித்ததறிக.

இங்கே வேகம் கெடுத்தாண்டவன் வேந்தன், இறைவன், மாயப் பிறப்பறுக்கும் மன்னன், மன்னவன் மகன் என்பவற்றால், குருவையே வேந்தன் முதலிய பெயராற் குறிப்பது மரபாதல் விளங்கும். 'கோகழி யாண்ட குருமணி' என்புழியும் ஆண்டவன் குருநாதனே எனல் புலப்படும். நாதன் என்றதும் குருவையே உணர்த்துகின்றது. நமச்சிவாயத்தை உபதேசித்த நாதன்றாள் வாழ்க என்றது சிவவாழ்த்து அன்று குருவாழ்த்தே.

'ஏகனும் ஆகி அநேகனும் ஆனவன்
நாதனும் ஆனான்என் றுந்தீபற
நம்மையே ஆண்டான் என்றுந்தீபற'

இதில் ஆண்டவன் குருநாதன் என்ற உண்மை வெளிப்படும். 'மெய்கண்டதேவன் மிகுசைவநாதன்' எனச் (சைவாசாரியன் என்று) சிறப்புறக் கூறியதுணர்க. 'மிகு' என்ற அடையால், தனக்குமேலொன் றில்லாத்தலைமையை உணர்த்துதல் மரபு, அதனை 'மிகுசைவத்துறை விளங்க', மிகுநூல், மிக்கதொருபக்குவத்தால் மிகுசத்திநிபாதம் மேவு தலும், மிகுசைவநாதன் என்னும் ஆட்சிகளிற் காண்க.

இக் குருநாதன் நம் வேகங் கெடுத்தாண்டவன் என்னும் பெரும் பேறுறல் ஒன்றே நாம் பிறந்ததன் பயனாகும். நம்மை அவன் ஆட் கொள்ள எடுக்குந் திருமேனியை அருள் நூல்கள் மூவகைப் படுத்துக் கூறுகின்றன.

போகியாய் இருந்து யிர்க்குப் போகத்தைப் புரிதல் ஓரார்
யோகியாய் யோக முத்தி உதவுதல் அதுவும் ஓரார்
வேகிஆனாற் போல் செய்த வினையினை வீட்டல் ஓரார்
ஊகியா மூடர் எல்லாம் உம்பரின் ஒருவன் என்பர்,

இச் சிவஞானசித்தியார் திருவிருத்தம் அம் முத்திருமேனியையும் உணர்த்தும். போகத் திருவுருவம், யோகத்திருவுருவம், வேகத்திரு வுருவம் அவை.

போகத்திருமேனி :—கல்யாணசுந்தரர், சோமாஸ்கந்தர், உமா மகேசுவரர்.

யோகத்திருமேனி :—தக்ஷிணாமூர்த்திதேவர். பிக்ஷாடனர்.

வேகத்திருமேனி :—காமாரி, வீரபத்திரர்.

இதில், போகியாய், யோகியாய் என்றவாறு வேகியாய் என்னாது, வேகியானாற்போல் என்றதை உணர்தல் கடன்.

'அகளமயமாய் நின்ற அம்பலத்துஎம் கூத்தன்
சகளமயம்போல் உலகில் தங்கி—நிகளமாம்
ஆணவ மூல மலம் அகல ஆண்டனன்'

என்றதிலும் கண்ணுதல்தன் நிறைவதனிற் கலந்து காயம். கழிந்தக் கால் எங்குமாய்க்கருது அரன்போல் நிற்பன் என்றதிலும் உள்ள போல் என்பது போல் அறியப்படும் மாயாவாதிகளுக்கு எட்டாத ஒன்று இது.

வேகம் கெடுத்து ஆண்டவன் குரவன். சரியாகுரு, கிரியாகுரு, யோக குரு மூவகையருள்ளும் அடங்காத ஞானகுருவையே 'அருட்குரு' என்பது மரபு, சிவஞான சித்தியாரில், 'மன்னும் அருட்குரு' (252) 'அருட்பரன்' (253) எனத் தொடக்கத்தினும், 'யார்க்கும் ஈனமிலான் ஞானகுருவே; குருவும் இவனே ஈசன்+உம்) இவன் தான் என்றும் இறைஞ்சியேத்தே,' "ஆசான் அருளால் அடிசேர் ஞானம் வந்திடும், மற்றென்றாலும் வாராதாகும். மற்றவையும் அவன் அருளால் மருவும்" பரம்பிரமம் இவன் பரசிவன் தான், பரஞானம் இவன், பராபரன் தான், அரன் தருஞ்சீர் நிலையெல்லாம் இவனே என்றும் அருட் குருவை வழிபடவே அவன் (சிவன்) இவன் (குரு) தான் ஆயே சிவமே ஆக்கும் என நூலின் முடிவினும் ஞான குருவையே போற்றிய உண்மையை உணர்க. இதனை அறியாதார் 'அருட்குரு' என்ற பிறிதினியைபு நீக்கிய அடையுள்ள ஒட்டுப் பெயரை (ஒருசொன்னீர்மைத்து என்றதும் நோக்காமல்) அருள்+குரு என இரு சொல்லாகப் பிரித்து அருளினால் என மூன்றுவ தனுருபு விரித்துரைத்தார். முதனூலில் "தவத்தினின் உணர்த்த" என்றதற்குத்தகவழி நூலினும் கொள்ள விரும்பி அங்கனம் கொண்டாரா னர், அதனை, "மன்னும் அருள் என்றதும் ஈண்டு இறப்பில் தவத்தின மேற்று. மூன்றுவது விரித்துரைக்க" என்னும் உரையாலறிக, அருள்-ஞானம், அருட்குரு ஞானகுரு. ஞானசாதனம் யோகாதியான இறப்பில் தவம். சாத்தியமான ஞானத்தையுணர்த்தும் இடத்தில், சாதனத்தைக் கோடல் சிறிதும் ஈண்டுப் பொருந்தாது, எட்டாவது நூற்பா முதல் அந்நூன்முடிவு வரையில் 'அருட்குரு' எனப் பிறிதினியைபு நீக்கிய அடை கொண்டதாகவே ஆசிரியர் அருளிய உண்மையை அனைவரும் தெளிய அறியலாம்.

அத்தகு தலைமையுடைய குருவருளைப் பெற வேண்டின், நம் வேகம் கெடவேண்டும். அவ்வேகம் மனத்தாலும் வாக்குகாலும் காயத்தாலும் உண்டாகும். வாக்கு-உரை, நாக்கு என இருதிறம். வாக்குவேகம்-சொற் பற்றிய வேகம். நாக்கு வேகம்- நுகர்வாலுண்டாகும் வேகம், நடை-காயம் குறித்து நின்றது. ஒழுக்கம் பற்றிய வேகமும் அடங்கும். பத்தம்-பந்த சம்பந்தம். பெத்தம் எனவும் படும். துட்டம்-துஷ்டம், தூஷிக்கப்படுவது, வெறுப்பிற்கு நிற்பது. இவ் வெல்லாவற்றாலும் வேகமும் பாவமும் நிகழும், இவை அனைத்தும் விட்டகலப் போக்கினால் அன்றி வீடு பெறலரிது, துஷ்டபக்த வேகம் எனலாகாது. பக்தர் என்றால் அடையான துஷ்டம் வேகம் இரண்டும் முறையே அப் பக்தர்க்கு முன்னும் பின்னும் நில்லா. வேகமும் அவ்வேகத்தாலாம் பாவமும் வேரறக் கெடுதல் வேண்டும்.

> "தாவா மனவேகம் சாற்றும் உரைவேகம்
> நாவாரும் வேகம் நடைவேகம்—ஓவாத
> துட்டபத்த வேகம்எனச் சொல்வேகம் இத்தனையும்
> விட்டகற்றி னல்அன்றே வீடு."

என்னும் பழைய அருட்பாடலை நன்குணர்ந்து, வேகங் கெடுத்தல் வேண்டி, அதைக் கெடுத்தாளும் ஞான குருவை வழிபட்டு, வேகங் கெடுத்துய்யும் வெற்றியுற்று வாழ்க. இஃது ஐந்தொழில் வெற்றியுள் முதலாய படைத்தற்றொழில் வெல்க என்றதால் சிவாநந்தத் தோற்றம் வெல்க என்னும் கருத்தாய் நின்றது. 'தோற்றம் துடியதனில்' என்றதும் ஈதே, இதனை அறிவார் ஆர்?

திருமாலடியார்

இராமாநுசர்

வித்துவான் திரு. கா. அ. மணவாளன், பி.ஏ., பி.ஓ.எல்.,

உலகில் பிறர்படும் துன்பத்தைக் கண்டு தானும் துன்புறுதல் அல்லது அத்துன்பத்தைக் கண்டு, தான் பொருது அதற்கு இரங்குதல் என்ற இந்த இரண்டு வகையிலேதான் வைணவம் அமைந்துள்ளது. ஒருவன் காயமுற்று இரத்தம் சிந்தினால் அதைப் பார்த்த மற்றவன் தானும் காயமடைந்ததாய் நினைப்பின் அங்கு வைணவம் உண்டென்று பெரியோர் கூறுவர். இப்படிப்பட்ட பேரருளை உணர்த்தும் வைணவ சமயத்திலே இறைவனை உயிராகவும் இவ்வுலகத்தைச் சரீரமாகவும் கொண்டு போற்றும் கொள்கையே மிக முக்கியமான கொள்கையாகும். எனவே இவ்வுலகில் உயிர்களுக்குச் செய்யும் தொண்டெல்லாம் அவ்வுயிரைச் சரீரமாகவுடைய இறைவனுக்குச் செய்யும் தொண்டாகும். அதுபோலவே இறைவனிடம் உள்ளபடி அன்பு கொள்வது எல்லா உயிர்களிடத்தும் அன்பு கொள்வதாகும். இத்தத்துவத்தை 'விசிட்டாத்துவைதம்' என்ற பெயரால் சாதி, இனம், குலம், மொழி என்ற வேற்றுமையின்றி யாவரும் பின்பற்றும்படி அருளியவரே இராமாநுசர். இவ்இராமாநுசரே வைணவ உலகில் பரமகுருவாய் விளங்குபவர். இவர் ஓராண்வழியாய் உபதேச பரம்பரையில் வந்த பெரிய திருமந்திரத்தையும், இரகசியங்களையும் சாதிமதபேதமின்றி யாவரும் உய்யும் வண்ணம், தன்னுடைய குருவின் கட்டளையையும் மீறி உபதேசித்த பெரும் புரட்சியாளராவார்.

அருட்கடலாகிய இவ்விராமநுசர், சான்றோர் பலர் தோன்றிய, 'தெண்ணீர் வயல் தொண்டை' நன்னாட்டில், உலகம் போற்றும் பெரும் புகழையுடைய காஞ்சிமாநகரத்துக்குக் கிழக்கேயுள்ள செங்கயல்வாவிகள் சூழ்வயல்களையுடைய சீபெரும்பூதூரில் சாலிவாகன சக ஆண்டு தொள்ளாயிரத்து முப்பத்தொன்பது பிங்கள ஆண்டில் சித்திரைத் திங்களில் திருவாதிரை நாள் கூடிய நல்லோரையில் அவதரித்தார். இவர் தந்தையார் பெயர் கேசவப் பெருமாள். தாயார் பூமிப் பிராட்டியார். இராமாநுசர் பிறந்த நற்செய்தியைக் கேட்டவுடனே திருமலையில் திருவேங்கடவனுக்குத் திருத் தொண்டு செய்துவரும் பூமிப்பிராட்டியாரின் தமையனாரான திருமலை நம்பிகள் பெரிதும் மகிழ்ந்தார். தனது தங்கையின் குழந்தையைக் காணவேண்டுமென்று சீபெரும்பூதூருக்குப் புறப்பட்டு வந்தார். பெரும்பூதூருக்கு வந்த திருமலைநம்பிகள்

ஆதிசேடனின் அமிசமாகப் பிறந்துள்ள ஒளிமயமான குழந்தையைக் கையிலெடுத்து உச்சிமோந்து மகிழ்ந்தார். இராமபிரானின் தம்பியான இலக்குவனுடைய தோற்றப்போலே தொண்டுச் செல்வத்தையே பெற்று விளங்குவதால் அக்குழந்தைக்கு 'இளையாழ்வார்' என்று பெயரிடுமாறு பெற்றோர்களுக்குப் பணித்தார். அவ்வண்ணமே அவர்களும் 'இளையாழ்வார்' என்றே பெயரிட்டு மகிழ்ந்தனர்.

இங்கு இவ்வாறு இளையாழ்வாராகிய இராமாநுசர் அவதரித்த பின்பு சீபெரும்பூதூருக்குப் பக்கத்திலுள்ள மழலைமங்கலத்தில் கமலநயன பட்டருக்கு வாழ்க்கைப் பட்டிருந்த பூமிப்பிராட்டியாரின் தமக்கையான பெரிய பிராட்டியார் என்பவருக்கும் ஓர் அருமருந்தன்ன ஆண்மகவு தோன்றியது. திருமலைநம்பிகள் அங்கும் சென்று அக்குழந்தையையும் வாழ்த்தி 'கோவிந்தன்' என்ற பெயரைச் சூட்டும்படி பணித்தார். பெரும் பூதூரில் இராமாநுசர் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமு மாக வளர்ந்து வந்தார். உரிய காலத்தில் உபநயனமும் ஆயிற்று. பின்பு வேதம், உபநிடதம் ஆழ்வார்களுடைய அருந்தமிழாகிய அருளிச் செயல்கள் என்று இவ்விதம் கற்கவேண்டிய பலகலைகளையும் கற்றுத் தேர்ந்தார். 'சுருதிகள் நான்கும் எல்லையில்லா அறநெறிகள் யாவும் தெரிந்தவர்' என்ற நிலையைத் தமது பதினாருவது ஆண்டு முடியுமுன்பே பெற்றுவிட்டார். பின்பு இளையாழ்வார் பெரியோர்களின் கட்டளைப்படி தஞ்சமாம்பாள் என்பவரைத் திருமணம் செய்து கொண் டார். சிலகாலம் இல்லறத்தே இனி வாழ்ந்தாலும் அவருக்கு முழுமை யும் இல்லறம் சுவைக்கவில்லை. மனைவியும் அவருடைய அறிவு அனுட் டானங்களுக்கு ஏற்ப ஒத்துழைக்கவில்லை. திருமணமான பின்பு சில திங்களில் இராமாநுசரின் தந்தையார் பரமபதமடைந்துவிட்டார். தந்தையின் பிரிவால் துயருற்ற இராமாநுசர் பெரும்பூதூரிலிருந்து தாயாரையும் மனைவியையும் அழைத்துக் கொண்டு காஞ்சீபுரம் வந்து குடியேறினர். அக்காலத்தில் காஞ்சிபுரத்தையடுத்துள்ள திருப்புட்குழி என்னும் ஊரில் யாதவப்பிரகாசர் என்னும் அத்துவைத வேதாந்தி யொருவர் தம்மை வந்தடைந்த பல மாணுக்கர்களுக்கும் வேதாந்த பாடங்களைக் கற்பித்து வந்தார்.

இராமாநுசரும் உயர்ந்த தத்துவங்களையும் வேதாந்த விழுப்பொருள் களையும் மேலும் கற்க விரும்பியதால் யாதவப்பிரகாசரையணுகி அவரு டைய இசைவு பெற்றுச் சீடர்களில் ஒருவராய்த் தாமுமமர்ந்து பாடம் கேட்கலானுர். இவ்விதம் இராமாநுசர் வேதாந்த பாடங்களைக் கேட்கும் செய்தி மழலைமங்கலத்தில் வசிக்கும் கோவிந்தருக்கும் தெரிந்தது. அவரும் பெற்றோர்கள் அனுமதி பெற்றுக் காஞ்சிபுரத்திற்கு வந்து இராமாநுசருடன் கலந்து உரையாடிய பின்பு யாதவப் பிரகாசரைச் சரணடைந்து தாமும் வேதாந்த பாடம் பயின்று வரலானுர். அந்நாளில் யாதவப்பிரகாசரிடம் வெளியூர்களிலிருந்தும், உள்ளூரிலிருந்தும்

எண்ணற்ற மாணவர்கள் வந்து குருகுலக் கல்வி முறையில் பாடம் பயின்றனர். இராமாநுசருடைய கூர்த்த அறிவுக்கு ஏற்ற வகையில் யாதவப்பிரகாசருடய வேதாந்த விளக்கங்கள் அமையவில்லை. அதைத் தவிர இவருடைய பக்தி நெறிக்கும், அருள் நெறிக்கும் ஒத்ததாகக் குருவினுடைய உபதேசங்கள் அமையவில்லை. எந்த விளக்கங்களிலும் உள்ளம் அமைதியுருது வினுக்கள் தோன்றிக் கொண்டேயிருந்தன. ஆதலால் யாதவப்பிரகாசருடைய விளக்கவுரைகளுக்கு அவர்முன்னிலை யிலேயே மறுப்புரைகளேயும், வினுக்களேயும் அடிக்கடி எழுப்பி வந்தார்.

இராமாநுசருடைய அறிவாற்றலில் யாதவப் பிரகாசருக்கு நம்பிக்கை யிருந்தாலும் பலர் முன்னிலையில் தம்முடைய குறைபாட்டைச் சுட்டிக் காட்டுவது பிடிக்கவில்லை. யாதவப்பிரகாசரைத் தம் கருத்துக்கு இசையச் சிந்திக்கும்படிச் செய்ய வேண்டுமென்பது இராமாநுசருடைய எண்ணம். ஆதலால் அக்காலமுறைப்படி மற்ற சீடர்களைப் போலவே தாமும் தம் ஆசாரியருக்கு விருப்பமான தொண்டுகளைச் செய்வதில் பெரிதும் ஈடுபட்டார். எப்போதும் பக்தியோடும், மரியாதையோடும் பழகுவார். இராமாநுசருடைய அறிவையும் ஆற்றலையும் யாதவப் பிரகாசர் குறைத்து மதிப்பிடவில்லையென்ருலும், குருவைவிஞ்சிய சீடராயிருப்பது அவருக்குப் பிடிக்கவில்லை. அதற்கு ஏற்ருற்போல் எதிர்பாராத நிகழ்ச்சியொன்று நடந்து விட்டது.

ஒருநாள் இராமாநுசர் யாதவப்பிரகாசருக்கு எண்ணெய் தேய்க்கும் பணியிலீடுபட்டிருந்தார். அந்த நேரத்தில் ஒரு சீடர் வந்து ஒருவேத வாக்கியத்திற்குப் பொருள் கூறும்படிக் கேட்டார். அதற்கு யாதவப் பிரகாசர் அத்துவைத ஆசாரியர்கள் கூறிய வழியில் பொருள் கூறினுர். அதாவது 'கப்யாசம்' என்று தொடங்கும் தொடருக்கு இறைவனுன திருமகள் நாதன் குரங்கின் பின்புறம் போன்ற சிவந்த அழகிய கண்களை யுடையவன் என்று பொருள் கூறினுர். இப்பொருளைக் கேட்ட இராமாநுசருக்குப் பெரிதும் வருத்தம் உண்டாகியது. அதனுல் துன்பமதிகமாகிக் கண்களினின்றும் நீர் பெருகியது. அக்கண்ணீர்ப் பெருக்கு யாதவப்பிரகாசருடைய தொடையில் விழுந்து சுரீரென்று சுடவே யாதவப்பிரகாசரும் நிமிர்ந்து நோக்கினுர். இராமாநுசர் கண்ணீர்ப் பெருக்குடன் இருப்பதைப் பார்த்துக் காரணம் என் என்று கேட்டார். அதற்கு இராமாநுசர் அந்த 'கப்யாசம்' என்ற தொடர் இறைவன் சூரியனைக் கண்ட தாமரையைப் போன்ற சிவந்தகண்களை யுடையவன் என்று பொருள் கூறுவதற்குப் பொருத்தமாயிருக்கத் தாங்கள் பொருந்தாப் பொருளைக் கூறியதனுல் என்னுல் தாங்க முடிய வில்லை என்று கூறினுர். அதனைக் கேட்டுப் பெருஞ்சினம் கொண்ட யாதவப்பிரகாசர் இராமாநுசரை நோக்கி "நாம் சொன்னபடி கேட்ப தாயின் இங்கு நம்மிடம் படிக்கலாம். இல்லையேல் இன்றே இவ் விடத்தை விட்டுச் செல்லலாம்" என்று கடுமையாகக் கூறிவிட்டார்.

இவ்விதம் கூறினாலும் இராமாநுசர் யாதவப்பிரகாசரை விட்டு உடனே நீங்கிவிடவில்லை. இதுபோலவே உபநிடதங்களுக்குப் பல இடங்களில் யாதவப்பிரகாசர் கூறிய பொருள்களைப் பக்குவமாகவும், பணிவாகவும் இராமாநுசர் மறுத்துத்தருக்க ரீதியில் வேறுபொருள்களைக் கூறிவந்தார்.

இப்படி இருவரும் ஒற்றுமையின்றியிருக்கும் நாளில், இராமாநுசரை ஒழிக்க என்ன செய்யலாம் என்று யாதவப்பிரகாசர் யோசித்து வந்தார். இராமாநுசருக்குத் தெரியாமல் சில சீடர்களையழைத்து வினவினார். இப்படிப் பல முறை கூடி முடிவில் வன்முறை வழியாகத்தான் இதற்கு முடிவு காண முடியும் என்று நம்பினார். இராமாநுசர் இல்லாதபொழுது எல்லா மாணவரையும் கூட்டி இப்படியே போய்க் கொண்டிருந்தால் நம்முடைய வேதாந்தத்துக்கும் கொள்கைகளுக்கும் ஆபத்து வந்து விடும். ஆதலால் நம்முடைய கொள்கைகளைக் காப்பாற்ற எந்த விதமான பாவச் செயல்களையும் செய்ய நாமெல்லோரும் தயாராக இருக்க வேண்டும் என்று உருக்கமாக வேண்டிக் கொண்டார். அதற்கான திட்டத்தையும் வெளியிட்டார். இப்போது எல்லோரும் காசியாத்திரைக்குப் புறப்படவேண்டும். அப்போது இராமாநுசரும் நம்முடன் வருவார். அவரைக் காசியில் கங்கையின் மணிகர்ணிகா கட்டத்தில் தள்ளிவிடவேண்டும். அவ்வளவுதான் என்றார். சீடர்களும் சம்மதித்து விட்டனர்.

யாதவப்பிரகாசர் தம்முடைய திட்டத்தை மிகவும் திறமையாக மறைத்து வைத்தார். இராமாநுசரிடம் முன்பு இருந்ததைவிட அதிகமாக அன்பு காட்டி நேசித்தார் கள்ளங்கபடமற்ற இராமாநுசரோ எல்லாம் உண்மையென்று நம்பினார். தாமும் வடதேசயாத்திரையில் சேர்ந்து கங்கை நதியில் நீராடி வரப்போகிறோம் என்ற மகிழ்ச்சியில் மூழ்கியிருந்தார். தம் அன்னையாரிடம் தெரிவித்து அவருடைய அனுமதியையும் பெற்று விட்டார். இவருடன் பயின்ற சிற்றன்னையின் புதல்வராகிய கோவிந்தபட்டருக்கு இராமாநுசர் மீது எப்பொழுதும் பக்தியோடு கூடிய அன்புண்டு. கோவிந்தபட்டரும் இராமாநுசருடன் காசியாத்திரைக்குத் தயாரானார். கோவிந்தபட்டர் இராமாநுசரைப்போல யாதவப்பிரகாசரிடம் மாறுபாடு கொள்ளவில்லை யென்றாலும் யாதவப்பிரகாசர் கூட்டிய கூட்டங்களில் கோவிந்தபட்டர் கலந்து கொள்ளவில்லை. இராமாநுசருக்கு ஒருவகையில் கோவிந்தர் உறவு முறையாயிருப்பது யாதவப்பிரகாசருக்குத் தெரியுமாதலால் இவரைப் பிரித்தே சதியாலோசனைகளை நடத்தினார். எனினும் கோவிந்தபட்டர் மற்ற சீடர்களுடன் நெருங்கிப் பழகி வந்ததால் சதித்திட்டங்களைப் பற்றி எப்படியோ அறிந்திருந்தார். இராமாநுசரை எப்படியும் காப்பாற்றிவிட வேண்டும் என்ற நல்ல எண்ணத்தினால் இவரும் காசியாத்திரைக்குத் தயாரானார்.

(தொடரும்)



காஞ்சிக் கயிலாசநாதர் கோயில்

திரு. கே. எஸ். நரசிம்மன், பி ஏ., பி.எல்., ஐ.ஏ.எஸ்.,

திருநாவுக்கரசு சுவாமிகளால், 'கல்வியில் கரையிலாத காஞ்சி மாநகர்' என்று 1300 ஆண்டுகளுக்கு முன்பே புகழ்ந்துபோற்றப்பெற்ற சிறப்புடையது காஞ்சிபுரம். பல்லவப் பேரரசர்களின் தலைநகரமாக விளங்கிய காஞ்சிபுரம், எண்ணற்ற பல எழில்மிகுந்த கோயில்களை உடைய மாட்சிமை வாய்ந்ததாகும். அவற்றுள் எல்லாம் கயிலாச நாதர் கோயில் என்பது, சிற்பக்கலை கட்டிடக்கலை வரலாற்றுத்துறை ஆகியவற்றில் பெரிதும் சிறப்புடையதாக, அறிஞர்களால் புகழ்ந்து போற்றப் பெற்று வருகின்றது.

கி.பி. 666 முதல் 705 வரையில் அரசாண்ட இராசசிம்ம பல்லவன் என்னும் அரசனால், இக்கோயில் கட்டப்பெற்றது. இப்போது இக்கோயில் காஞ்சிபுரத்தின் மேற்கு எல்லை முடிவு பெறும் இடத்தில் இருப்பினும், முற்காலத்தில் இது நகரத்துக்கு நடுவே அமைந்திருந்தது என்று தெரிகின்றது. இதற்குப் புறமதில், திருமடைவிளாகம், மாட வீதிகள் முதலியன சிறப்பாக இருந்தன. ஆனால் இப்பொழுது அத்தகைய நிலைகள் இன்றி, நகரின் ஒருமருங்கே எளிய நிலையில் விளங்கிக் கொண்டிருக்கின்றது. காலப்போக்கில் புறமதில் முதலியன இல்லாமற் போயின. எனினும் இக்கோயில் சிற்பக்கலை உணர்ந்த அறிஞர் பெருமக்களால், பெரிதும் வியந்து பாராட்டப் பெற்று வருகின்றது.

கோயில் வாயில் சிறியது. கோயில் நீள் சதுரமாக அமைந்துள்ளது. வாயிலைத் தாண்டியவுடன் எதிரே தனித்து ஒரு சிறிய கோயில் உள்ளது. அதற்கு இருபுறங்களிலும் உட்செல்ல வழிகள் உள்ளன. உள்ளே நீளமாக நாற்கோண வடிவில், கோயில் காட்சி தருகின்றது. அதனைச் சுற்றி ஏறத்தாழ 6 அடி அகலமுள்ள திருச்சுற்று அமைந்திருக்கின்றது. திருச்சுற்றில் உட்புறச் சுவர்கள் பல சிறுசிறு கோயில்களாகவே காட்சி தருகின்றது. கருவறை முன் மண்டபம் ஆகிய இரண்டும் நன்கு

அமைந்திருக்கின்றது. கருவறைக்கு மேல் கண்ணைக் கவரும் அழகிய சிறிய விமானம் அமைந்துள்ளது. அஃது இராசசிம்மன் நினைவையும் பல்லவர் காலத்துக் கட்டிடக் கலையின் சிறப்பையும், விளக்கிக் கொண்டு நிற்கின்றது. உட்புறச் சுவர்களில் பற்பல அழகிய சிற்பங்கள் வியக்கத் தக்க முறையில் செதுக்கப் பெற்றிருக்கின்றன. கருவறையிலுள்ள இலிங்கம் பெரியதாக 8 அடி உயரத்தில் 16 பட்டைகளைக் கொண்டுள்ளது. அதன் பின் சுவரில் சோமாஸ்கந்த வடிவம் இருக்கின்றது. கோயில் மதிற் சுவர்களின் உட்பக்கம் முழுவதும், அழகிய பல தெய்வத் திருவுருவங்கள், சிறப்பாகச் செதுக்கப் பெற்றிருக்கின்றன. அவைகளின் அழகை நேரில் கண்டுதான் அனுபவித்தல் வேண்டும் எல்லாச் சுவர்களிலும் சிங்கத்தூண்கள் உள்ளன. இக்கோயிலில் பற்பல கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. திருக்கயிலாய மலையின் அளவைக் கொண்டே, இக்கயிலாசநாதர் கோயில் கட்டப்பெற்றுள்ளது என்று, தவத்திரு விபுலானந்த அடிகள் போன்ற சான்ருேர்கள், இக்கோயிலை வியந்து புகழ்ந்துள்ளனர்.

இக்கோயில், பண்டைக் காலத்தில் சிற்பம் ஓவியம் இசை நடனம் நாடகம் முதலிய பல்வேறு கலைகளுக்கும், நிலைக்களமாக விளங்கி யிருந்தது. இரண்டாம் நந்திவர்மன் காலத்தில், காஞ்சிபுரத்தைக் கைப்பற்றிய பகையரசனுகிய விக்கிரமாதித்தன் (கி.பி. 733-746) என்னும் சாளுக்கிய மன்னனும் கூட, இக்கோயிலின் சிறப்பைக் கண்டு வியந்தான். அதனுல் இக்கோயிலின் செல்வங்களைக் கவர்ந்து கொள்ளாமலும், அதனைச் சிதைத்து அழிக்க முற்படாமலும் இருந்த துடன், மேலும் பல நன்கொடைகளை வழங்கி மகிழ்ந்தான் என்று கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

இக்கோயிலைக் கட்டிய இராசசிம்மன் பல கலைகளில் வல்லவன் பெரியபுராணத்தில், பூசலார் நாயனுர் வரலாறு குறிக்கும் சிறப்புப்பெற்ற அரசன், இந்த இராசசிம்மன் தான் என்று ஆராய்ச்சியாளர்கள் கருது கின்றனர். பாரவி, தண்டி முதலிய வடமொழிப் பெருங் கவிஞர்கள் இவனது அவைக்களப் புலவராக விளங்கினர். இவனது கல்வெட்டுக் களில் இவனைப் பற்றிய பல சிறப்புப் பெயர்கள் காணப்படுகின்றன. இராசசிம்மன் "சைவசித்தாந்தத்தில் பேரறிவுடையன்" என்று ஒரு கல்வெட்டுக் குறிக்கின்றது. முதன் முதலாக இக்கயிலாசநாதர் கோயில் கல்வெட்டுக்களில் தான், 28 சிவாகமங்களின் பெயர்களும் காணப்படுகின்றன என்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். இத்தகைய பல சிறப்புக்கள் கொண்ட இவ்வழகிய சிறந்த கோயிலை, அன்பர்கள் அனைவரும் கண்டு வணங்கி மகிழ்ந்து இன்புறுவார்களாக.

——:o:——



அம்மையின் திருவுருவங்கள்

[புலவர் திரு. ந. ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்.,]

முன்னுரை :

'பொருள் ஒன்றே உள்ளது; அதனை அறிஞர்கள் பலவாகக் கூறுவர். என்பது வேதமொழி. அம்முறையில் சக்தி என்பது ஒன்றேயாயினும், அதன் தொழிற்பாட்டால் அது பலவகையாகக் கூறப்படும். 'சத்திதான் பலவோ? என்னில், தான் ஒன்றே; அநேகமாக வைத்திடும் காரியத்தால்' என்பது சிவஞானசித்தியார். திருவாசகத்தில் வரும் திருவெம்பாவைப் பாடல்களை அனைவரும் அறிவர். திருவெம்பாவை என்பது, மனோன்மனி சர்வபூததமனி பலப்பிரதமனி கலவிகரணி பலவிகரணி காளி இரவுத்திரி சேட்டை வாமை என்னும் நவசத்திகளின் செயலைக் குறிக்கின்றது என்பர். அதனாலேயே 'சக்தியை வியந்தது' என அதற்கு நுண்பொருள் தலைப்புக் கொடுக்கப் பெற்றிருக்கின்றது. சக்தி ஒன்றே பலவாறு வடிவபேதங்கள் கொண்டு, வெவ்வேறு தொழில்களை இயற்றி உயிர்கட்கு நலம்புரியும் என்பது கருத்து. இந் நவசக்திகளின் இயல்புகள் செயல்கள் வருமாறு :—

நவசக்திகள் :

(1) மனோன்மனி, பக்குவம் எய்திய உயிர்களை மலத்தினின்று நீக்கிச் சிவத்துடன் சேர்க்கும். (2) சர்வபூத தமனி, உயிர்களிலெல்லாம் ஒன்றி உடன்கலந்து நின்று, அவற்றின் புண்ணிய பாவங்களை அகற்றுவிக்கும். (3) பலப்பிரதமனி, சூரியனிடத்தில் பதிந்து நின்று தீய கிருமிகளை அழித்து, நல்ல பொருள்கள் பெருகி வளர்வதற்கு ஆக்கம் அளிக்கும். (4) பலவிகரணி, சந்திரனிடத்தில நிலைபெற்ற அமுதத் துளிகளைச் சொரிவித்துப் பயிர்பச்சைகளும் உயிர்த்தொகுதிகளும் தழைத்துச் செழித்தோங்க உதவி செய்யும். (5) கலவிகரணி வானத்தில் இருந்து, எல்லாப் பொருள்களையும் ஏற்று நின்று அவை தன்னிற் கலந்து இணைய இடம் தந்து நிற்கும். (6) காளி காற்றின்கண் கலந்து பிராணமயமாய் விளங்கி, உயிர்களுக்கு நலம் விளைவிக்கும். (7) இரவுத்திரி, நெருப்பின்கண் தங்கி அதற்கு வெப்பம் அளித்து நிற்கும். (8) சேட்டை, நீரில் நிலைபெற்று, அதற்குக் குளிர்ச்சியும் சுவையும் உண்டாக்கும். (9) வாமை, மண்ணில் விளங்கி ஐம்பூதங்களின் இயல்புகளும் செயல்களும் நிகழுமாறு செய்யும்.

சத்த மாதர்கள் :

உலகை இயக்கி ஐந்தொழில்கள் புரிந்துவரும் அருளாற்றலாகிய சக்தியானது, தனக்கென்று ஒரு பெயரும் வடிவமும் இல்லாததாயினும் அன்பர்களின் பொருட்டுப் பலபெயரையும் வடிவங்களையும் கொள்ளும். இம்முறையில் பிராமி மகேசுவரி கௌமாரி வைஷ்ணவி வராகி இந்திராணி சாமுண்டி என்னும் சத்த மாதர்களாகவும் வடிவங்கொண்டு சக்தி ஒன்றே திகழ்வது உண்டு. இவ்எழுவருடைய இயல்களையும் செயல்களையும், இலக்கியங்கள் ஆங்காங்கே சிறப்புறக் குறிக்கும். யானைத் தோலைப் போர்த்தவள் மகேசுவரி. வானரங்கள் குவித்த மலைகளால் கடலை அடைத்தவள் நாராயணி. கடலில் வயிறு கிழியும்படி வேற்படையை ஏவியவள் கௌமாரி. கற்பக மலரைக் கூந்தலில் அழகுறச் சூடியவள் இந்திராணி. சிங்கத்தை ஊர்தியாகக் கொண்டவள் காளி. வேதங்களால் மிகவும் புகழ்ந்து சிறப்பிக்கப் பெறுபவள் அபிராமி. பிரளயத்தினின்று உலகை மீட்டருளியவள் வராகி எனப் பலவகைகளில் சக்தியின் வடிவ பேதத்தைச் சாத்திரங்கள் புகழ்ந்து கூறும்.

சிலப்பதிகாரம் என்னும் செந்தமிழ்க் காப்பியத்தில், அம்மை அல்லது சக்தி வழிபாடு பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. கொற்றவை பிடாரி பத்திரகாளி காளி துர்க்கை ஆகிய சக்தியின் வடிவபேதங்கள் சிலப்பதிகாரத்தில் வழக்குரை காதையில் குறிக்கப்பட்டுள்ளன. இவ்வாற்ருல், இற்றைக்கு ஏறத்தாழ 1800 ஆண்டுகட்கு முற்பட்ட மிகப் பழங்காலத்திலேயே தமிழ்நாட்டிற் சக்தி வழிபாடும், சக்தியின் வடிவபேதங்களும் பரவிப் பெருகியிருந்தமை தெரியலாம். சக்தி வழிபாட்டை விளக்கும் சாக்தேய சமயத்தின் தந்திர நூல்களில் சக்தியின் வடிவபேதங்கள் பற்பல கூறப்பெறுகின்றன. அவற்றுட் சிலவற்றைப் பற்றிய தியான சுலோகங்களின் குறிப்புக்களை மட்டும் இங்கு இயன்ற வரையில் காண்போம்.

(1) பாலாம்பாள் : நான்கு திருக்கைகளை உடையவள். அவற்றில் முறையே அக்கமாலை புத்தகம் அபயமுத்திரை வரதமுத்திரை என்பவற்றைக் கொண்டிருப்பவள். நீலோற்பல மலரில் வீற்றிருப்பவள். செந்நிற மேனியினள். ஆகமங்களில் இவளுக்கு 14 வகையான திருவுருவ அமைப்புக்கள் கூறப்பெற்றிருக்கின்றன. இவளது மூல மந்திரம் மூன்று அல்லது ஆறு எழுத்துக்களைக் கொண்டது.

(2) லலிதாம்பாள் : சிந்தாமணி என்னும் சிறப்பு மிக்க நவ மணித்திரளால் அமைந்த மாளிகையில், பிரம்மா விஷ்ணு உருத்திரன் ஈசுவரன் என்னும் நால்வரையும் நான்கு கால்களாகக் கொண்ட கட்டிலில், காமேசுவரரின் மடியில் வீற்றிருப்பவள்; பதினறு வயதினள். பாசம் அங்குசம் பஞ்சபாணம் கரும்புவில் ஏந்தியவள். தலையில் பிறை சூடி இருப்பவள். செந்நிற மேனியள். இவளது மூலமந்திரம் 15 எழுத்துக்களைக் கொண்டது. அது 12 வகைகளில் வெவ்வேருக அமையும். 16 எழுத்துக் கொண்ட அவளது மூலமந்திரம் ஷோடசி எனவும், 18 எழுத்துக் கொண்டது சௌபாக்ய வித்யை எனவும் வழங்கப் பெறும். அனந்தபைரவம், அயக்கிரீவம், தட்சிணமூர்த்தம் என இவளை வழிபடும் நெறிகள் மூன்று வகைப்படும். இவள் அனைத்துலகுக்கும் பேரரசி நிலையிற் பிறங்குபவள். இராஜமதங்கி மந்திரிணி ஆகியோர் இவளது அமைச்சர்களாவர். காஞ்சி காமாட்சியம்மையே ஸ்ரீ லலிதாதேவியாகக் கருதப்படுகிருள்.

(3) இராசராசேசுவரி: இவள் லலிதா தேவியைப் போன்றே திருவுருவம் உடையவள். இவளது மூலமந்திரம், 28 எழுத்துக்கள் கொண்ட மகாஷோடசி எனப்படும். ஸ்ரீ வித்யையே இப்படிவங்களுக் கெல்லாம் உரிய பொதுவான சாத்திரமாகும். இராசராசேசுவரி ஞானத்தின் முழு நிறைவைக் குறிக்கின்றாள். இவள் 40 வயதினள். சித்திரை மாதத்தில் வரும் வசந்த நவராத்திரி விழா மிகவும் சிறப்பானதாகும்.

(4) நவாட்சரிபாலாம்பாள்: இத்தேவி, பாலாம்பாளின் வடிவத்தையே கொண்டவள். ஒன்பது எழுத்துக்களைக் கொண்ட மூல மந்திரத்தை உடையவள். அங்கம் உபாங்கம் பிரத்தியங்கம் என்னும் மூன்றனுள், லலிதாதேவியின் அங்கமாகத் திகழ்பவள்.

(5) அன்னபூரணி: லலிதாதேவியின் உபாங்கமாகத் திகழ்பவள். வலக்கையில் பொன் அகப்பையும், இடக்கையில் மணிகள் பதித்த பொற்கலசத்தில் பாற்சோறும் ஏந்தி, உயிர்களுக்கெல்லாம் உணவு வழங்கும் தாயாக விளங்குபவள். பொன்நிறம் வாய்ந்தவள். பொற் கலனும் பூமாலைகளும் அணிந்திருப்பவள். காசி க்ஷேத்திரத்தைத் தனக்கே உரிய சிறப்புத் தலமாகக் கொண்டவள்.

(6) அசுவாரூடாம்பாள்: லலிதா தேவியின் பிரத்தியங்கமாகத் திகழ்பவள். சிவந்த மேனியுடன் சிவப்புநிற ஆடைகளும் சிவந்த நிற அணிகலன்களும் தரித்துச் சிவப்புநிறக் குதிரையில் இவர்ந்து வருபவள். ஒளிமுகமும் முக்கண்களும் கொண்டவள். தனது நான்கு கைகளிலும் முறையே பல்லம் (சவுக்கு) என்னும் படையும், சர்ப்பாத முத்திரையும் பகைவரைப் பிணிக்கும் பாசமும், தீயவரை அச்சுறுத்தும் பொற் பிரம்பும் ஏந்தியிருப்பவள்.

(7) இராசமதங்கி: கடம்பமலர் சூடியவள்; அமிழ்தக் களிப்பில் திளைப்பவள். மடியில் வீணையை வைத்துக் கொண்டு வாசிப்பவள். செந்நிற ஆடை உடுப்பவள். நெற்றியிற் கஸ்தூரி திலகம் அணிந்தவள். பிறைசூடியவள். காதில் சங்கக் குழைதரித்தவள். புன்முறுவல் பூத்த முகத்தவள். கலைகளின் அறிகுறியாகக் கிளியை ஏந்தியிருப்பவள். மரகதமணியின் நிறம் வாய்ந்தவள், இராசராசேசுவரியின் அறிவியல் கலையியல் ஆற்றலாக விளங்குபவள். மாசி மாதத்தில் வரும் நவராத்திரி விழா இவளுக்கு உரியது. மதுரை மீனாட்சியம்மையை இராசமதங்கி யாகவே கருதுவர்.

(8) லகுஷியாமா: மதங்க முனிவரின் மகள். வைரமணிகள் பதித்த வீணையை வாசிப்பவள், அமிழ்தக்களிப்பு உடையவள். இந்திர நீல நிறம் கொண்ட ஒளிமேனியளாய்ப் பேரழகுற்றுத் திகழ்பவள். இராசமதங்கியின் அங்க தேவதை.

(9) வாக்வாதினி: வெண்தாமரை மலரில் வீற்றிருப்பவள். பாரதி என்னும் பெயரினள். தன் இரு கைகளிலும் எழுதுகோலும் புத்தகமும் ஏந்தியவள். இளம்பிறை சூடியவள். வெண்ணிறம் உடையவள். உலக வாழ்வின் அச்சத்தைப் போக்குபவள். இராச மதங்கியின் உபாங்க தேவதை. இவளைக் கலைமகளின் கூறாகக் கருதுவர்.

(10) நகுளி: இராசமதங்கியின் பிரத்தியங்க தேவதை. முத்துப் போன்ற முறுவலள். பகைவராகிய நாகங்களின் நாக்கை அறுப்பவள். பக்தர்களுக்குப் பரிந்து உதவி புரிபவள்.

(11) வராகி: லலிதாதேவியின் படைத் தலைவி. தண்டினி எனவும் வழங்கப்படுவாள். ஜம்புகேசுவரம் என்னும் திருவானைக்காவில் உள்ள அகிலாண்டேசுவரி, தண்டினியாகவே கருதப்படுகின்றாள். தன்பால் அடைக்கலம் புகுந்த அடியவர்களின் வேண்டுகோளை நிறைவேற்றி அருள்பவள். தனது எட்டுக் கைகளிலும் முறையே சக்கரம் வாள் உலக்கை கலப்பை அபயம் வரதம் சங்கு கேடயம் ஆகியவற்றைக் கொண்டிருப்பவள். ஆஷாடமாதத்தில் வரும் நவராத்திரி விழாவிற்கு உரியவள். இலகுவராகி, சொப்பனவராகி, திரஸ்கரணி ஆகிய மூவரையும் முறையே அங்கம் உபாங்கம் பிரத்தியங்கம் என்னும் தேவதைகளாகக் கொண்டவள்.

(12) புவனேசுவரி: தேவி பாகவதம் என்னும் நூலில், மிகவும் புகழ்ந்து போற்றப் பெறுபவள். உதயசூரியன் போன்ற ஒளி நிறம் உடையவள். திருமுடியில் பிறையும், காதுகளில் தோடு முதலிய அணிகலன்களும் தரித்தவள். தனது நான்கு கைகளிலும் முறையே பாசம் அங்குசம் அபயம் வரதம் என்பவற்றைக் கொண்டவள். சாக்த வழிபாட்டின் தலைமைத் தெய்வம் புவனேசுவரியே ஆவள். ஸ்ரீ வித்யையின் பஞ்சதசாட்சரி மந்திரம் இவளுக்கு உரியது. இவளது ஓரெழுத்து மந்திரத்தை உச்சரிப்போர் முற்றுணர்வும் பேரின்பமும் எய்துவர்.

(13) சண்டி: மின்னல் ஒளியுடையவள். சிங்க ஊர்தியினள். பயங்கரத் தோற்றத்தினள். ஒன்பது மாதர்களாற் சூழப்பட்டவள். முக்கண்ணும் பிறை முடியும் உடையவள். கண்டன் என்னும் அசுரனைக் கொன்றவள். தனது எட்டுக் கைகளிலும் முறையே சக்கரம் கதை வாள் கேடயம் அம்பு வில் பாசம் கண்டனம் ஆகியவற்றைக் கொண்டிருப்பவள். இவளது மூலமந்திரம் 9 எழுத்துக்கள் கொண்டது.

(14) துர்க்கை: பராசக்தியின் காவற் படைத் தலைவி. ஆபத்துக் காலத்தில் அடைக்கலம் புகுந்தவர்க்கு அச்சம் போக்கி அருள்புரிபவள். துர்க்கம் என்பது அகழி. அது மதிலைப் பகைவர் அணுகமுடியாமல் செய்வது போல, தன்னை வழிபடும் அன்பர்களைத் துன்பங்கள் அணுகாவகையிற் காத்தலால் இவள் துர்க்கை எனப் பெயர் பெற்றாள். அரசர்க்கும் வீரர்க்கும் உரிய வழிபடு தெய்வம். ஐப்பசி மாதத்தில் வரும் நவராத்திரி விழாவில். கௌரி லட்சுமி சரசுவதி ஆகிய மூவரும் சேர்ந்த ஒருருவமாகத் திகழ்பவள் துர்க்கை. அக்கினிகலை சூரியகலை சோமகலை என்னும் முக்கூறும் தன்பாற் கொண்டவள். ஆபத்துக் காலத்தில் தேனில் தோய்த்த வெட்சிப் பூவைத் தூவி, துர்க்கா சூக்தம் என்னும் மந்திரம் ஓதி அருச்சனை செய்து வழிபட்டால், எல்லா இன்னல்களும் பிணிகளும் சூரியனைக் கண்ட பனிபோல விலகி ஒழியும். இவள் தனது நான்கு கைகளிலும் முறையே சங்கு சக்கரம் வில் அம்பு ஏந்தியிருப்பாள். தலையில் முடியும் பிறையும் சூடி இருப்பாள். சிங்கவாகனமும் பசும் புல்லின் நிறமும் கொண்டவள்; மானும் இவளுக்கு வாகனம் ஆகும்.

(15) மகிஷாசுரமர்த்தினி: இவளைக் கொற்றவை எனவும் கூறுவர். எருமைத் தலையை உடையவனாக இருந்த மகிஷன் என்னும் கொடிய அசுரனை வென்று கொன்றதனால், இவளுக்கு மகிஷாசுரமர்த்தினி எனப் பெயர் வழங்குவதாயிற்று. தமிழகத்திற் பல கோயில்களிலும் மகிஷாசுரமர்த்தினியின் அழகிய சிற்பங்களைக் காணலாம்.

மகாபலிபுரம் கங்கைகொண்ட சோழபுரம் நாமக்கல் முதலிய இடங்களில் மகிஷாசுரமர்த்தினியின் அழகிய அற்புத சிற்பத் திருவுருவங்கள் அமைந்திருக்கின்றன. சிலப்பதிகாரத்தில் வேட்டுவவரியில், இளங்கோவடிகள் மகிஷாசுரமர்த்தினியின் திருவுருவத்தினைச் சிறந்ததொரு சொல்லோவியமாக வரைந்து காட்டியுள்ளார்.

அவள் யானைத்தோல் போர்த்துப் புலியின் உரியை உடுத்துள்ளாள். கானத்து எருமைக் கருந்தலைமேல் நிற்கின்றாள். வானோர்கள் வணங்க, மறைமேல் மறையாகி, ஞானக்கொழுந்தாய் விளங்குகின்றாள். வளையணிந்த கைகளில் வாளேந்தி இருக்கின்றாள். மான் ஊர்தியில் ஏறி, மகிஷனை அழித்தாள். அரி அரன் அயன் என்னும் மூவரின் இதய மலர்களில் சோதி விளக்காகச் சுடர்வீசி வயங்குகின்றாள். அவளது தாமரை போன்ற கைகளில் சங்கு சக்கரமும் தவழ்கின்றன. சிவந்த கண்களை உடைய சிங்கத்தின் மீது இவர்ந்து வருகின்றாள். சிவபிரானின் திருமேனியின் ஒரு பகுதியில் உறைகின்ற அவளை, வேதங்களெல்லாம் தொழுதேத்திப் பணிகின்றன.

முடிவுரை :

இத்தகைய வெவ்வேறான பற்பல திருவுருவங்களைக் கொண்டு திகழும் அருளாற்றலாகிய சக்தி என்னும் அம்மையின் அரியபெரிய சிறப்புக்களை உணர்ந்து, நாம் அனைவரும் அவளை அன்புடன் துதித்து வழிபட்டு உய்ய முயலுவோமாக.

சிவனடியார் வரலாறு

செருத்துணை நாயனர்

—((×))—

சேலுங்கயலும் செழுமணியும் தள்ளும் பொன்னி மாநதிபாயும் மருகல்நாட்டில், அகத்தேயும் புறத்தேயும் குலமரபின் ஒழுக்கம் வழுவா ஒருமை நெறியைப் பின்பற்றும் செல்வம் மலிந்த குடிமக்கள் வாழும் தஞ்சாவூரில் வேளாண்குடியில் அவதரித்தவர் மெய்யன்புடைய சைவராகிய செருத்துணையார்.

செருத்துணையார் திருவாரூரை அடைந்து அங்கே திருத்தொண்டுகள் பலவும் செய்து காலந்தொறும் தவருவல் பெருமானை வணங்கி வந்தார்.

இவ்வாறு ஒழுகிவரும் நாளில் அங்கே வழிபாட்டிற்காக வந்த கழற் சிங்க நாயனுருடைய பெருந்தேவி, மாலை கட்டும் மண்டபத்தின் பக்கத் திலே விழுந்து கிடந்த மலர் ஒன்றினை எடுத்து மோந்ததைக் கண்டு, பொறுக்கமாட்டாத தலைமைத் தனித் தொண்டராகிய செருத்துணையார், மிகவேகத்துடன், கத்தி ஒன்றினை எடுத்துப் பெருந்தேவியைப் படியில் வீழ்த்தி அவள் மூக்கைப் பற்றி, "பரம்பொருளின் திருமுடியில் ஏறும் மலரினை எடுத்து மோந்த மூக்கினை அறுப்பேன்" என்று கூறிக்கொண்டு அறுத்தெரிந்தார். மன்னராகிய கழற்சிங்கரின் மனைவி என்று தெரிந்தும், பெருமானுக்குரிய மலரை மாசுபடுத்திய குற்றத்திற்குரிய தண்டனையைக் கொடுத்த செருத்துணையாரின் அடிமைத் திறத்தினைச் சேக்கிழார் "தனித்தலைமைத் தொண்டு" என்று போற்றுகிருர்.

இவ்வாறு தொண்டுகள் பல செய்து இறுதியில், செய்ய பொன் மன்றுளாடும் மலர்ப்பாத நிழலடைந்து, இறவா இன்பம் எய்தினர்.

"வள்ளிமணுளன்"

பிரமாதீச ஆண்டு ஆவணித் திங்கள் 10-ஆம் நாள் (26-8-73) ஞாயிற்றுக் கிழமையன்று செருத்துணைநாயனரின் திருநட்சத்திரமாகிய பூசம் வருவதையொட்டி வெளியிடப் பெறுகிறது.

சந்தான குரவர் வரலாறு

டாக்டர் சொ. சிங்காரவேலன், எம்.ஏ., பி. எச்.டி.,

மெய்கண்டார் வரலாறு (தொடர்ச்சி)

மெய்கண்டார் திருவவதாரம் செய்தார் என்று கூறவந்த புராண ஆசிரியர், இவ்வருளாளரது திருவவதாரத்தால் இன்னின்ன நலங்கள் பெருகின என்று உளமாரப் பாடி மகிழ்கின்ருர்.

ஆகம வழி ஒழுகுகின்ற தவத்தோர்கள் ஓங்கி வாழவும், மெல்லத் திருந்துகின்ற 'மந்தமான பரிபாகர்' களும் அத்துவித உண்மை தெரிந்துணர்ந்து மகிழ்ச்சி எய்தவும், சிவஞான போதமாகிய தமிழ்மறை இயற்றமிழாக இனிது மேவவும் மெய்கண்டார் தோன்றிஞர் என்று கூறுகின்ருர். நன்னெறி பரப்பிடத் தோன்றியருளிய வியாத முனிவர் உரைத்த பிரமசூத்திரம் என்ற நூலிற்கு, நீலகண்டர், சங்கரர், இராமாநுசர், ஆனந்த தீர்த்தர் என்னும் நால்வரும் செய்த பேருரைகள் சொல் வாய்மை, பொருள் வாய்மை தெளிதல் பொருந்திடவும், அவற்றைத் தெளிய இயலாதவர்கள், துன்பம் தவிர்ந்து, 'அத்துவித சுத்தநிலே' இன்னதென உணர்ந்து 'அவன் நான்' என்று பாவிக்கும் ஞான பாவனே எய்திடத்தோன்றிஞர் என்று தெளிவுறுத்தும் திருப்பாட்டும் இவ்விடத்து நம் சிந்தைக்குப் பெருவிருந்தாக உள்ளது. 'பொல்லாத சமயவாதிகளும் வியப்பு எய்த, மண்ணுலகில் ஞானம் மிக' இச்சான்ருேரது திருவவதாரம் அமைந்ததென்கிருர், 'சிவனடியார் இன்புற்றனர்; எந்நாடுகளிலும் தென்னடே உலகத்திற் தலைமையானது என்று கொண்டாடினர்; கலையறிவுகள் அனைத்தும் இயல்பாகவே நிரம்பப் பெற்ற பிள்ளையாராக வந்து தோன்றிஞர்' என்று கூறி முடிக்கின்ருர்.

" நலமலியும் சிவனடியார் எஞ்ஞான்றும்
 ஆனந்தம் நண்ணி ஓங்கத்
தலமலியும் எந்நாட்டும் தென்னடு
 தலையெனவே சகங்கொண் டாடக்
கலைமலியும் பிள்ளையார் ஒருவர்தாம்
 தந்தைமனக் கவலைதீர
நிலவலயத் தவதரித்தார்; நிறையன்பர்
 சுற்றத்தார் மகிழ்ச்சி நீட "

கடந்தை மீளல் :

பெண்ணுகடத்திற்குச் செல்லும் நினைவு வந்ததும், வெண்காட்டுப் பெருமானிடம் விடைபெற்று அச்சுதக் களப்பாளர் ஞானப்பிள்ளையாருடனும் துணைவியாருடனும் புறப்பட்டுக் கடந்தைநகர் வந்து எய்திஞர். சுற்றத்தார், நண்பர் வந்து கண்டு இன்புற்ருர்கள். பிள்ளையார்க்குத் திருப்பெயரிடும் விழா நிகழ்ந்தது, திருமுறை வழித் தன்னை நினைவூட்டி, வழிபடச் செய்து அருளிப்பாடு புரிந்த 'சுவேதவனப் பெருமான்' திருப் பெயரே சூட்டப்பெற்றது.

திருவெண்ணெய் நல்லூரில் இளைய பிள்ளையார் :

சுவேதவனப் பெருமாள் என்ற திருப்பெயருடன் இச்சிறிய பெருந் தகையார் குழந்தை வடிவத்தில் இருந்தாலும் பேரறிவு சான்ற தக்கோராக விளங்கினுர். அச்சுதக்களப்பாளரின் மைத்துனர், அவரது துணைவியாரின் உடன்பிறந்தார் கடந்தைநகர் வந்து உலகம் உய்யவந்த பிள்ளையாரைக் கண்டு கண்டு கண்களித்தார். தம் மருகரைத் திரு வெண்ணெய்நல்லூர்க்குக் கூட்டிச் சென்று தம்மனையில் வளர்க்க வேண்டும் என்ற எண்ணம் அவர்க்குத் திருவருளால் தோன்றிற்று. விருப்பத்தை எடுத்து விளம்பினுர். களப்பாளரும் இசைந்தார். சுவேதவனப் பெருமாள் தம் அன்னையாருடன் தாய்மாமன் விருப்பத்திற் கிணங்கித் திருவெண்ணெய்நல்லூர் சென்ருர். முற்பிறப்பிலேயே சரியை, கிரியை, யோகம் முதலியன நிரம்பியவராதலின், சிறு வயதிலேயே-இளங்குழந்தை நிலையிலேயே ஞானம் பெறும் பக்குவத் தில், கருவிலே திருவுடையவராக-சாமுசித்தராக விளங்கினுர் பிள்ளை யார். இந்த வியத்தகு நிலையினை விளக்குகின்றது இவ்வழகிய திருப்பாட்டு :

> " அணைந்த காதலர் உம்மையில் ஆன்றநற்சரியை
> மணம் தவாதநற் கிரியைநல் யோகமே மன்னி
> இணங்குசாமுசித் திகநிலை யாண்டிரண் டினராய்ப்
> புணர்ந்திருக்கும்நாள் அங்ஙனம் நிகழ்ந்தது புகல்வாம் "

திருவெண்ணெய்நல்லூர்க்குப் பிள்ளையாரை அழைக்க வேண்டும் அங்கிருந்து அந்தத் தெய்வக்குருத்தை வளர்த்து வையகத்துக்கு வழங்குதல் வேண்டும் என்று திருவருட் குறிப்பு இருந்தபடியே இந்த நிகழ்ச்சியும் நிகழ்ந்தது என்று கூறலாம். திருக்கயிலாயபரம்பரையில் அகச்சந்தானகுரவருள் நான்காமவராகிய பரஞ்சோதி மாமுனிகள் பொதிகை மலையில் அகத்திய மாமுனிவரைப் பார்ப்பதற்காக வானவீதி யில் வந்து கொண்டிருந்தார். திருவெண்ணெய்நல்லூர்க்கு மேலே அணுகும்போது விமானம் தடைப்பட்டு நின்றது. திருவருட் குறிப்பை உணர்ந்தார் பரஞ்சோதியார்; கீழ் இறங்கினுர்.

சிவஞான உபதேசப் பேறு :

அகத்திய முனிவரைக் காண்டற்காகப் போந்த மாமுனிகளின் திருவுள்ளத்தே பிள்ளையார் நினைவு தோன்றுதலும், அத்தோற்றத் தோடு இழிந்த மாமுனிகட்கு பிள்ளையாரைக் கண்டு இன்புற்று மகிழ்தலும் வரலாற்று ஆசிரியரால் அழகுறுந் திருப்பாட்டுக்களால் மொழியப் பெற்றுள்ளன :

> "நேரதாக அவ்விமானம் நின்றிடுதலும், நிறைந்த
> தீர வாலறிவுடைப் பரஞ்சோதியார் தேர்ந்து
> வாரமோ டிழீ இச் சுவேதவனப் பெருமாட்குச்
> சேர மெய்யுணர்வு எய்தியதிறம் திருவருளால்"

> "தேர்ந்து தீக்கையும் மெய்கண்ட நாமமும் செறித்துச்
> சார்ந்த மந்தணமாம் சிவஞான போதத்தை
> ஈந்துதங்குரு அறிவுறுத்திய பொழிப்பு இசைத்தே
> ஆர்ந்த செந்தமிழ் ஆக்கெனப் பொதிவரை யடைந்தார் "

அன்பினுடன் இழிந்து, சுவேதவனப் பெருமாட்கு மெய்யுணர்வாகிய உண்மைஞானம் எய்திய திறத்தினைத் திருவருளால் தேர்ந்து அறிந்தாராம் மாமுனிவர், தம்முடைய அருளைத் தீட்சை முறையான் வழங்கி, "மெய்கண்டார்" என்ற தீட்சைத் திருப்பெயரும் சூட்டியருளினர் மாமுனிவர். மறைபொருளாக உள்ள பேருண்மைகள் பலவற்றை அறிவுறுத்தி, 'சிவஞானப் பேரறிவை' வழங்கினர். தமிழகத்திற்கு சிவஞானபோதம் அருளி, உலகை உய்க்குமாறு வாழ்த்திச் சென்றனர் அச்சான்றோர். இவ்வாறு திருக்கயிலாய பரம்பரை மண்ணுலகில் பரவிட மூலவித்தாக அமைந்தார் நம்முன்னவர்; மெய்கண்டமேலோராய்த் திருவெண்ணெய்நல்லூர் அருட்டுறையில் வீற்றிருக்கும் பொல்லாப் பிள்ளையார் அருளால் சிந்தித்துத் தெளிந்து, சிவஞான போதச் செழுநூலைப் பன்னிரண்டு நூற்பாக்களால் அருளி, அந்நூற்கு 'வார்த்திகப் பொழிப்புரை' யும் வழங்கினர் சந்தான முதற்குரவர்.

ஞான உபதேசமும் மாணுக்கர் சார்தலும்:

ஈராண்டிலேயே இவ்வாறு பேராசிரியராய் விளங்கிய மெய்கண்டார் தம்மை நாடி ஓடிவந்த மாணுக்கர்களுக்கு ஞான உபதேசம் புரிந்து திருவெண்ணெய் நல்லூர்த் திருத்தலத்திலே வீற்றிருந்தார். மூவாண்டில் உமை ஞானப் பாலுண்டு அமுதத் தமிழால் இறையருள் பெருக்கிய சிவஞானப் பிள்ளையார் போன்றே, மெய்கண்ட சிவமாகிய இந்தப் பிள்ளையாரும் கயிலைப் பெருமான் பேரருள் கைவரப் பெற்று, ஒப்பற்ற தத்துவசாத்திர முதற்குரவராக விளங்கி ஞான ஒளி பரப்பிச் செந்தமிழ் ஞாயிருகத் திகழ்ந்துவரும் செய்தி உலகெலாம் பரவியது நாளும் நாளும் வெண்ணெய்நல்லூர்க்கு அன்புலகம் விரைந்தோடி வரலாயிற்று.

> "அன்புமிக வுண்டாய் அதிலே விவேகமுண்டாய்த்
> துன்ப வினையைத் துடைப்பதுண்டாய்—இன்பம்
> தரும்பூரணத் துக்கே தாகமுண்டாய் ஓடி
> வருங் காரணர்க் குண்மை வை"

என்று பிற்காலத்தே தருமையாதீன முதற்பெருங்குரவர் மொழிந்தருளிய உரை—சிவபோகசாரச் செம்மொழி இங்கு நம் நினைவில் தோன்றுகின்றது. இறையடிக்கு ஆழ்ந்த அன்பும், தூய அறிவும், துன்பநீக்கம் வேண்டும் என்ற நோக்கும், பேரின்பத்தைத்தரும் பெருநிறைவினைப் பெற்றுய்ந்திட வேண்டும் என்ற தாகமும் உடையவர்களாய், விழைந்து விரைந்துவரும் விழுப்பம் உடையவர்களாய் வருவோர்க்குத்தான் ஞான ஆசிரியன் ஞான உபதேசம் கைகூடும். இந்நெறிப்படி மெய்கண்டார் தம்பால் மாணுக்கர் வருதலை அறிந்து, அவரவருக்குள்ள பண்பாட்டின் தரத்திற் கேற்ப ஞானத்தை வழங்கி நல்லாசிரியராக வீற்றிருந்தார்.

சகலாகம பண்டிதர் சந்திப்பு:

திருத்துறையூரில் சகலாகம பண்டிதர் ஆகிய அருணந்தி சிவாசாரியார், அச்சுதக் களப்பாளர் பெற்ற அருஞ்செல்வராகிய சுவேதவனப் பெருமாள் தம்மை நாடி வந்து கல்விப் பெருஞ்செல்வம் பெருமை நினைந்தார். மெய்கண்டாராகச் சுவேதவனப்பெருமாள் விளங்குதலை அவர்

அறியாமல் இருத்தல் இயலாது; ஆயினும் அவருடைய நூலறிவு அவர்க்கு முழுத்துணையாக நின்று வன்மை கூட்டவில்லை என்றே கொள்ள வேண்டியுள்ளது. திருவெண்ணெய்நல்லூர்க்குத் தாமே சென்று நேரில் அறிந்திடலாம் என்ற எண்ணத்துடன் துறையூரை விட்டுப் புறப்பட்டார் அருணந்தியார். தம்முடைய வருகையினைத் திருவெண்ணெய்நல்லூர்க் காராளர்கட்குக் கூறிவிட்டார். குலகுருவாகிய அருணந்தியாரை வரவேற்றுப் பணிந்து தொழுது மகிழ்வுற்றனர் ஊரார். சிவாகமச் சுவடிகள் தாங்கிய வண்டிகள் பலவுடன் வர, நன்மாணாக்கர் புடைசூழ நல்லூர்க்கு வந்த அருணந்தியார் அருட்டுறை சென்று, அண்ணலை அடிபரவிய பிறகு திருமடத்திற்கு எழுந்தருளினர். அன்பர் பலரும் ஆண்டுப் போந்து ஆசிரியன் அருள் வாழ்த்துப் பெற்றின் புற்றனர். அங்கும் மெய்கண்டார் வந்து தொழுதிலர். இறையருள் ஆகிய ஆனந்த வாரி படிவதனால் இன்புற்றுச் சிவமயமாய் விளங்கும் சிவஞானப் பிள்ளையார்க்கு உலகியல் நினைவு ஏது? தம்மையுணர்ந்து, தமை உடைய பிரானை உணர்ந்து அவ்வொருமைப் பாட்டிற் பிரிவிலராய் வீற்றிருந்தார் பிள்ளையார். சகலாகம பண்டிதர், பிள்ளையாரின் பெருநிலையை முற்றும் அறியாதவராகவே இருந்தார்.

அருணந்தி சிவனார் அகந்தை தவிர்தல்;

மெய்கண்டார் தம் மாணாக்கர்களுடன் இருந்து ஞானஉபதேசம் புரிந்து கொண்டிருக்கும் இடத்திற்கு விரைந்தார் பண்டிதர். அப்போதும் மாணாக்கர் இடையே இறையருட் பணியில் ஈடுபட்டு உரை விளக்கம் செய்து கொண்டிருக்கும் சமாதி நிலையினின்று மெய்கண்ட சிவத்தின் நினைவு உலகியற்கு மீளவில்லை. பண்டிதர் வந்ததோ, அவர் உள்ளத்து வீசிக் கொண்டிருக்கும் உணர்ச்சிப் புயல் குறித்தோ ஒன்றும் அறிந்திலர் பிள்ளையார். அச்சான்றோரது ஆண்டிளமை ஒன்றையே கருதியிருந்த சகலாகம பண்டிதற்கு வேறு ஒன்றும் விளங்கவில்லை. ஆம்; பண்டிதரின் அறியாமை அவருடைய நல்வினைப் பயனாலேயே அவ்வாறு நிலைகொண்டது என்றே நினைக்க வேண்டியுள்ளது. மெய்கண்டார் கண்களிற் படும்படியாகச் சென்று உலவி நின்றார். அப்போதேனும் தம் வருகையைத் தம்முடைய மாணாக்கர் வழி வந்த மகனார் அறிந்து கொள்வர் என்று கருதினார் அருணந்தியார். பிள்ளையாருடைய ஞான உரையோ சிறிதும் தடைப்பட்டதில்லை; ஆற்றொழுக்காகச் சிவஞானச் செய்தியைப் பகுத்துணர்த்தும் அரும்பணியில் ஆழ்ந்து நின்றார் மெய்கண்ட சிவனார். அப்போது இயல்பாக, உயிர்களைப் பற்றி நிற்கும் மும்மலங்களுள் 'ஆணவம்' என்ற மூலமலத்தைப் பற்றி மொழிந்திடுகின்றார் முதற்குரவர். சினத்தீ கனலும் சிந்தையுடன் அருணந்தியார் 'ஆணவத்திற்கு வடிவம் யாது?' என்று வினவினர்.

இந்த வினா திருச்செவியிற் பட்டதும் மெய்கண்டார் தம் உணர்வு கலைந்தவராய் நிமிர்ந்து பண்டிதரை நோக்கி, இனிமை ததும்பிய திருமுகத்தின் மலர்ச்சியோடு, தம்முடைய சுட்டு விரலால் அவரையே சுட்டிக்காட்டி அவரை முழுதும் பார்த்தார்; 'அருணந்தியார் அப்போது இருந்த நிலையே ஆணவ மலத்திற்கு வடிவம்' என்பதைச் சொல்லாமற் சொல்லி விட்டார் மெய்கண்டார்.

(தொடரும்)



புண் சுமந்த பொன்மேனி

க. கலியாணம், எம்.ஏ., டிப். எக்கான்.,

* * *

பண்சுமந்த பாடற் பரிசு
படைத்தருளும்
பெண்சுமந்த பாகத்தன்
பெம்மான் பெருந்துறையான்
விண் சுமந்த கீர்த்தி
வியன்மண்ட லத்தீசன்
கண்சுமந்த நெற்றிக்
கடவுள் கலிமதுரை
மண்சுமந்து கூலிகொண்
டக்கோவால் மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி
பாடுதுங்காண் அம்மானாய்.

—மாணிக்கவாசகர்.

அரிமர்த்தன பாண்டியன் மதுரையை அரசாண்டான். திருவாதவூரர் அவனுக்கு அமைச்சராக இருந்தார். குதிரைகள் வாங்குவதற்காக அரசனிடம் பெரும் பொருள் பெற்று அமைச்சர் கீழ்க் கடற்கரைக்குப் புறப்பட்டார். வழியில் திருப்பெருந்துறையை அடைந்தார். சிவபெருமான் ஞானாசிரியர் வேடங்கொண்டு குருந்த மரநிழலில் வீற்றிருப்பதைக் கண்டார். மனம் அவர்பாற் சென்றது. அடிபணிந்தார். அமைச்சரின் பக்குவ நோக்கி பரமாசாரியார் அவருக்கு ஞானோபதேசம் செய்தருளினார்; மாணிக்கவாசகர் என்று திருநாமம் சூட்டியருளினார். மாணிக்கவாசகர், குதிரைகள் வாங்கக் கொண்டுபோன பொருளையெல்லாம் அடியார்களுக்கும் ஆலயத்திருப்பணிக்கும் செலவிட்டார், இதையறிந்த மன்னன் அவரை மதுரைக்குத் திரும்பும்படி ஓலையனுப்பினான். இறைவன் அசரீரியாக "குதிரைகள் வரும் போகலாம்" என்று சொல்ல மாணிக்கவாசகர் மதுரை சென்றார். குதிரைகள் வரக்காலம் தாழ்க்கவே அரசன் அமைச்சரைத் துன்புறுத்தினான். அவர் மீது திருவுளம் இரங்கிய சிவபெருமான் காட்டிலுள்ள நரிகளைக் குதிரைகளாக்கித் தாமும் குதிரைச் சேவகனாகி மன்னனிடம் பரிகளை ஒப்புவித்தார். இறைவன் திருவிளையாட்டால் அன்றிரவே குதிரைகளெல்லாம் நரிகளாகிக் காட்டுக்கு ஓடிவிட்டன. திருவாதவூரடிகள் ஏதோ மாயம் செய்து விட்டாரென்று எண்ணி அவரை அரசன் ஏவலரை விட்டுக் கடும் தண்டனைக்கு ஆளாக்கினான். மாணிக்கவாசகர் சோமசுந்தரப் பெருமானிடம் முறையிட்டு அழுதார். திருவுளம் இரங்கிய பெருமான் வையையாற்றில் வெள்ளம் பெருகச் செய்தார். வெள்ளம் நகருக்குள் புகுந்தது.

வெள்ளத்தைத் தடுக்கவும், உடைப்புக்களை அடைக்கவும் குடி மக்களுக்கு அளந்து எல்லைகீறிக் கொடுத்து அரசன் ஏற்பாடுகள் செய்தான். அவரவர்கள் பங்கை அடைக்கத் தொடங்கினுர்கள். பிட்டு விற்று வாழ்க்கை நடத்துபவளும், நாள்தோறும் முதற்பிட்டைச் சோம சுந்தரப் பெருமானுக்கு அன்பினுல் அருத்துவிப்பவளுமான வந்தி என்றொரு முதியாள் இருந்தாள். அவள் பங்கை அடைப்பதற்கு ஆள் இல்லை. சிந்தை நொந்து இறைவனிடம் குறையிரந்து முறையிட்டாள். ஆலவாய் அண்ணல் அவளுக்கு அருள் செய்யும் பொருட்டு ஒரு கூலியாளாக மண்வெட்டி கூடையுடன் தெருவில் வந்து "கூலி கொடுத்து என் வேலை கொள்வாருண்டோ" என்று கூவினுர். அதைக் கேட்ட வந்தி அந்த ஆளை அழைத்துத் தன் பங்கை அடைத்துக் கொடுக்கும்படி சொன்னுள். "கூலி என்ன தருவாய்" என்ருர் வந்தவர். "நான் விற்கும் பிட்டைத் தருவேன்" என்ருள் வந்தி. உடனே கூலியாள் "நான் மிகப் பசித்திருக்கிறேன். உதிர்ந்த பிட்டை யெல்லாம் கொடுத்தால் உண்டு, இளைப்பாறிப் பின் என் வேலைத் தலைக்குப் போவேன்" என்ருர். அதற்கு இசைந்து பிட்டைக் கொடுத் தாள் பிட்டு வாணிச்சி. "தந்தை தாய் இல்லாத எனக்கு இதைக் கொடுத்துச் சோர்வு போக்கினுய். பிட்டு மிகவும் இனிமையாக இருக்கிறது. இது அந்த சோமசுந்தரப் பெருமானுக்கே தகுதியானது" என்று சொல்லி வேலை மேல் சென்ருர்.

அங்கு வேலை வாங்குவோரிடம் தாம் வந்தி ஆள் என்று பெயரைப் பதிவு செய்து விட்டு வேலையைத் தொடங்கினுர். ஆடியும், பாடியும், குதித்தும், தண்ணீரில் நீந்தியும், தூங்கியும், அவ்வப்போது வந்தியிடம் சென்று பிட்டு வாங்கி உண்டும் வேலை செய்யாது நின்ருர். பங்கு அடைக்காததற்கு ஏவலர் காரணம் கேட்டும் கூலியாள் பதில் சொல்ல வில்லை. ஏவலர் "இவன் பித்தனே? பேய் பிடிக்கப் பட்டவனே? அழகாகவும் இருக்கின்ருன். வாழ்ந்து கெட்டவனுக இருப்பானு? முன்பு கூலி வேலை செய்தவனுகவும் தோன்றவில்லை. இதனை மன்னனுக்குத் தெரிவிப்போம்" என்று சொல்லிப் போனுர்கள். போனவர்கள் பாண்டியனை வணங்கி "அரசே! எல்லாரும் தம் பங்குகளை அடைத்து விட்டார்கள். வந்திக்குக் கூலியாள் என்று சொல்லித் தன் பெயரைப் பதிவு செய்து கொண்ட ஒருவன் மட்டும் தன் பங்கை அடைக்கவில்லை. கட்டழகனுக இருக்கின்ருன். அவனை அடிக்கவும் அஞ்சினேம்" என்று விண்ணப்பித்தார்கள். அரசனும் அமைச்சர் முதலியோருடன் புறப் பட்டு கரை அடைபடாத இடத்திற்குச் சென்ருன். "இப்பங்கை அடைக்காதவன் யார்" என்று கேட்டான். "இவன் தான் வந்தியுடைய கூலியாள்" என்று கைபிடித்திழுத்து அரசன் முன் நிறுத்தினுர்கள். அரிமர்த்தன பாண்டியன் கோபம் மிகுந்து, பிரம்பு கொண்டு அந்த கூலியாள் முதுகில் அடித்தான். கூடையுடன் மண்ணை உடைப்பில் போட்டு விட்டுக் கூலியாள் மறைந்தார். வெள்ளமும் மறைந்தது.

சிவபெருமான் மேல் பட்ட அடி, அரசன் முதுகில் பட்டது; அண்ட சராசரங்களிலுள்ள அனைத்துயிர்களின் மேல் பட்டது; கருவிலுள்ள உயிர்கள் மேல் பட்டது; உயிரில்லாத ஓவியங்களின் மேலும் பட்டது; விண்ணவர் மண்ணவர் அனைவர்பேரிலும் பட்டது; எல்லோரும் ஒருவர்க்கொருவர் புண்ணைக் காட்டி மயங்கினார்கள். அமைச்சராகிய மாணிக்கவாசகருக்காக இறைவன் நிகழ்த்திய திருவிளையாடல் என்று அரசன் அவரை அழைத்துப் பெருமை செய்து முன்போலவே அமைச்சுரிமை தாங்கும்படி வேண்டினான். அவரும் தமக்கு உலகபோகங்கள் வேண்டாமென்றும், சிதம்பரத்திற்கு வரும்படி இறைவன் ஆணையிட்டிருக்கிறார் என்றும் சொல்லி அரசனிடம் விடைபெற்றுச் சென்றார்.

இறைவன் எல்லா உயிர்களிலும் நீக்கமற நிறைந்திருக்கிறான் என்றும், திக்கற்றவர்க்குத் தெய்வமே துணையென்றும், இறைவனே வெள்ளத்தையடைப்பதற்குக் கூலியாளாக வந்தது அவன் பெருங் கருணையைக் காட்டுகிறதென்றும், கூலிபெற்று வேலை செய்யாவிடில் தண்டனை கிடைக்கும் என்றும் இந்த திருவிளையாடலால் நாம் அறிந்து கொள்ளும் உண்மைகளாகும். இந்த திருவிளையாடல் ஆவணி மூலத்தன்று நடைபெற்றது. இந்த ஆண்டில் அந்த விழா நாளது ஆவணி மாதம் 21-ஆம் நாள் (6-9-1973) வருகிறது. அதை முன்னிட்டே இக் கட்டுரை தீட்டப் பெற்றது. அந்த நாளில் மக்கள் எல்லாம் தங்களால் இயன்ற சமுதாயத் தொண்டு ஏதேனும் ஒன்றைச் செய்வது தலையாய கடமையாகும்.

சென்ற இதழ் சமய பொது அறிவு வினாக்களுக்கு விடைகள்

(9) சமயச் சின்னங்கள் எவை? அவற்றை அணிவதெப்படி?

திருநீறு, உருத்திராக்கம், சந்தனம், திருமண் முதலியன. திருநீற்றை மூன்று விரல்களால் எடுத்து வடக்கு அல்லது கிழக்கு முகமாக நின்று, அண்ணாந்து "சிவாயநம" என்று சொல்லிக் கீழே சிந்தாமல் அணியவேண்டும். உருத்திராக்கம் சிவபெருமான் கண்களாகப் பாவிக்கப் பெறுவது ; அணிந்து கொள்வது உடலுக்கு நலம் பயப்பது. சந்தனம் புருவ மத்தியில் அணிய வேண்டியது; தண்மையைத் தருவது. வைணவர் நாமம் இட்டுக்கொள்வதைத் திருமண் என்பர். திருமாலின் திருவடியின் சாயலானது.

(10) நீங்கள் வழிபட்ட ஒரு முருகன் தலத்தைப் பற்றி எழுதுக.

திருப்பரங்குன்றம் : நக்கீரர் இயற்றிய திருமுருகாற்றுப் படையில் ஆறுபடை வீடுகளில் ஒன்றாகச் சொல்லப் பெற்றிருக்கிறது. தேவாரப் பாடல்பெற்ற பதியாகவும் அமைந்தது. முருகன் தெய்வயானையைத் திருமணம் செய்து கொண்ட இடம். மலையில் குடைகோயிலாக இருக்கிறது. மதுரைக்கு அருகிலுள்ளது. அருணகிரியாரின் திருப்புகழ்ப் பாடலும் உண்டு.

சமயபோதனை

பாடம் 14 வினக்கள் ஆகஸ்ட் 1973.

வினக்கள் இந்த இதழ்க் கட்டுரைகள் பற்றியனவும் சமய அறிவுத் தொடர்பானவையும் ஆகும். விடைகளை முழு அளவு (Foolscap size) இரண்டு தனித் தாள்களில் நான்கு பக்கங்களுக்குள் எழுதி இவ்வலு வலகத்திற்கு 31-8-1973க்குள் கிடைக்கும்படி அனுப்பிவைக்க வேண்டும். சந்தா எண், பெயர், வயது, முகவரி இவற்றைத் தெளிவாக எழுதியனுப்ப வேண்டும்.

மதிப்பெண் சமம்] [மதிப்பெண் 100

1. உலகம் என்பதைப்பற்றிப் பாரசீகக் கவிஞன் கூறியதென்ன? அதற்கு விளக்கம் தருக.
2. காஞ்சி கயிலாசநாதர் கோயில் சிறப்புக்களைப் பற்றிச் சுருக்கமாக எழுதுக.
3. நவசக்திகள், சத்தமாதர்கள் பெயர்களை வரைக.
4. "இளையாழ்வார்" இளமை நலம் பற்றிக் கூறுக.
5. "வேகம் கெடுத்தாண்ட வேந்தன்"—பொருள் விளக்கம் தருக.
6. இறைவன் பிட்டுக்கு மண் சுமந்து பிரம்படி பட்ட கதையால் நாம் தெரிந்து கொள்ளும் உண்மைகள் எவை?
7. குலச்சிறையார், புகழ்த்துணையார் இவர்கள் என்ன தொண்டுகளில் ஈடுபட்டிருந்தனர்?
8. இராசராசசோழனின் பட்டப் பெயர்கள் எவை?
9. திருமாலின் பத்து அவதாரங்களின் தத்துவங்களை எழுதுக.
10. சிவமூர்த்தங்களின் பெயர்களைத் தருக.

விடைகளை எழுதி உரிய அஞ்சல் தலைகளையொட்டிக் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்ப வேண்டும்:—

"அருளோசை"
தமிழ்நாடு தெய்விகப் பேரவை,
நெ. 9, மகாராஜா சூரியராவ் சாலை,
சென்னை-600018.

சிவனடியார் வரலாறு

குலச்சிறை நாயனர்

—:o:—

"பன்னுதொல்புகழ் பாண்டிநன்னட்டிடை வளம் பொருந்திய மணமேற்குடியில் சுந்தரமூர்த்தி நாயனரால் "பெருநம்பி" எனப் புகழ்ந்தோதப் பெற்ற குலச்சிறையார், திருத்தொண்டினின்றும் வழுவாது திண்மையுடன் வாழ்ந்து வந்தார்.

குலச்சிறையார், திருநீறு, உருத்திராக்கம் தரிக்கின்றவர்கள் யாவராயினும் குலம், குணம் இவற்றைப் பாராமல் வணங்கித் துதிக்கின்ற செய்கையுடையவர். சிவனடியார்கள் பலராக வந்தாலும், ஒருவராக வந்தாலும் அன்பு மீதூற எதிர்கொண்டழைத்து நட்பாடி, திருவமுது செய்விக்கின்றவர். தென்னவன் நெடுமாறன் என்னும் பெரும் புகழுடைய பாண்டிய மன்னரின் முதலமைச்சராக விளங்கினர்; அப்பாண்டிய மன்னனின் பெருந்தேவியாகிய மங்கையர்க்கரசியார் செய்கின்ற சிவத் தொண்டுகளுக்கு "மெய்த்தொண்டராகத்" துணை நின்றவர். புல்லியர்களாகிய சமணர்களின் பொய்ச்சமயம் வீழ்ந்து, பாண்டி நன்னட்டில் திருநீற்றின் பெருமை பொலிந்து விளக்கமுறவும், சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர் பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவி மகிழ்ந்த சிறப்புடையவர். அசைவில் செழுந்தமிழ் வழக்கே அயல்வழக்கின் துறைவெல்லத் திருவவதாரம் செய்த சிவம் பெருக்கும் பிள்ளையாரிடம் வாதில் தோற்ற சமணர்களைக் கழுவிலே ஏற்றுவித்தவர். அன்னரின் திறத்தை எச்சொற்கொண்டு ஏத்திடவல்லேம்.

— தமிழ்விளம்பி

பிரமாதீச ஆண்டு ஆவணித் திங்கள் 19–ஆம் நாள் (4-9-73) செவ்வாய்க்கிழமையன்று, குலச்சிறை நாயனரின் திருநட்சத்திரமாகிய அனுடம் வருகிறது.